# புதியவன்

පුදියවන් PUTHEYAVAN

ஊருக்கு நல்லது சொல்வேன்–உண்மை அறிந்து சொல்வேன்

◆பாதை 01 ◆பயணம் 76 ◆திருவள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 25 வியாழன் , 08/05/2014

www.putheyavan.com



Ishara Motors

19B,மீன் சந்தை வீதி, மன்னார்

T.p-023 2223464

Mob : 077 7949106

E-mail : isharamotorsmn@gmail.com



PUBLIC LIBRARY JAFFNA.


# சர்வதேச விசாரணைக்கு 15இலட்சம் டொலர் தேவை

## நிதி திரட்டு வதர்க்கு கனடா. பிரித்தானியா. அமெரிக்கா இணக்கம்

(ஜெனிவா)
இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்றை முன்னெடுக்க 15 ல்ட்சம் டொலர்கள் தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபைஅறிவித்துள்ளது. விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற இறுதிக்கட்ட போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச விசாரணையொன்றை முன்னெடுக்கவே இந்தத் தொகை தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பு கணக்கிட்டுள்ளது. இலங்கை நாணயத்தின் பெறுமதியில் சுமார் இருநூறு மில்லியன் ரூபா பெறுமதியான இந்தத் தொகையை திரட்டிக் கொள்வது மற்றும் இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணையை எவ்வாறு முன்கொண்டு செல்வது என்பன தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் அண்மையில் கலந்துரையாடல்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு எதிராக ஆதரவளித்தமை நியாயமானதே ஐரோப்பிய ஒன்றியம்

இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவளித்தமை நியாயமானதே என ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மிகவும் பாரதூரமானவை என தெரிவித்துள்ளது. இலங்கை மற்றும்.....

(11 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்க வேலையென ஏமாற்றி இராணுவத்திற்கு ஆட்சேர்க்கின்றனர்– யாழ் அரச அதிபர்

(யாழ் செய்தியாளர்)
யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் இராணுவ ஆட்சேர்ப்பு குறித்து தான் இதுவரை அறிந்து கொள்ளவில்லையென்று தெரிவித்த அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், அரசாங்க வேலைவாய்ப்பு வழங்குவதாக கூறி மோசடி செய்து விட்டனர் என்று இதுவரை யாரும் முறையிடவில்லை என்றும் குறிப்பிட்டார். அவ்வாறு யாரும் முறைப்பாடுகளைச்செய்தால் அது குறித்து விரிவாக ஆராய்ந்து தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சியின் விமர்சனம் கோபத்தில் காகிதங்களை சுருட்டி பந்தாடிய அமைச்சர்

(கொழும்பு)
நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரின் விமர்சனத்தினால் கோபமடைந்த ஆளும் கட்சி அமைச்சர் ஒருவர் தமது உரை அடங்கியிருந்த காகிதங்களை சுருட்டிப் பந்தாக்கி எதிர்க்கட்சியினர் மீது விட்டெறிந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. இலங்கையின் தேசிய நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வாகனங்களுக்கு கட்டணங்களை அறவிடுவது தொடர்பான சட்ட மூலம் ஒன்றின் மீது ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## மைத்திபால சிறிசேன போட்ட பிச்சையில் பிரதமரான மஹிந்த ராஜபக்ச...



(பொலனறுவை)
மைத்திரிபால சிறிசேனவின் விட்டுக் கொடுப்பின் காரணமாகவே பிரதமர் பதவி மஹிந்த ராஜபக்ஸவைத்தேடி வந்ததாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் 47 வருட கால அரசியல் வாழ்க்கை மற்றும் 25 வருடகால பாராளுமன்ற பிரதிநிதித்துவம் ஆகியவற்றைக் கௌரவிக்கும் வகையில் பொலனறுவையில் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற பாலியல் கொடுமை தொடர்பில் கனடா விவாதிக்கவுள்ளது.

அமெரிக்காவில் உள்ள ஐக்கிய நாடுகளுக்கான கனேடிய தூதரகத்தில் இலங்கையில் இறுதி யுத்தத்தின் போது நடைபெற்ற பாலியல் வன்புணர்வு சம்பவங்கள் தொடர்பான அமர்வு ஒன்று நடைபெறுகிறது என. இன்னர்சிட்டிபிரஸ் இணையத்தளம் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது. இதன் போது இலங்கை இராணுவத்தினர் இறுதியுத்தத்தில் மேற்கொண்ட தமிழ் பெண்களுக்கு எதிரான பாலியல் துஸ்பிரயோகங்கள் தொடர்பில் யுத்த காலங்களில் பாலியல் கொடுமைகள்குறித்த ஐக்கியநாடுகளின் பிரதிநிதி சைனாப் பங்குரா அண்மையில் முன்வைத்த அறிக்கை விவாதத்துக்கு உட்படுத்தப்படவுள்ளது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## குழுவாகச் சேர்ந்து எவரும் அனுஷ்டிக்க முடியாது. கட்டளையிட்டார் யாழ் இராணுவத்தளபதி

(யாழ் செய்தியாளர்)
முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வைக் குழுவாகச் சேர்ந்து எவரும் அனுஸ்டிக்க முடியாது. அப்படி அனுஸ்டிப்பதாயின் அதனைத் தனித் தனியே வீடுகளில் முன்னெடுங்கள் என பல்கலை மாணவர்களிடம் யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி ஜெனரல் உதய பெரேரா தெரிவித்தார்.

பல்கலைக்கழக துணைவேந்தர், பீடாதிபதிகள், சிரேஸ்ட மாணவ ஆலோசர்கள், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் ஆகியோரை அழைத்து யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சந்திப்பொன்றை நேற்று காலை 9 மணி தொடக்கம் மதியம் 1.30 மணி வரை காங்கேசன்துறையில் உள்ள இராணுவ விடுதியில் நடத்தியிருந்தார்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா பொதுச் சபைத் தலைவருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் பேச்சுவார்த்தை

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவர் டொக்டர் ஜோன் ஆசேவிற்கும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிற்கும் இடையில் நேற்றைய தினம் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இலங்கையில் நடைபெற்று வரும் உலக இளைஞர் மாநாட்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவர் ஆசே பங்கேற்றுள்ளார்.

(11 ஆம் பக்கம் பார்க்க)


Ishara Motors

BAJAJ

Spare parts sales dealer for David Pieris Motor Company

Distributor for MRF Tyre & Tube David Pieris Motor Company Ltd


T.p-023 2223464 Mob : 077 7949106 E-mail : isharamotorsmn@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மைகள் ஒருபோதும் உறங்குவதில்லை........

# யாழ். பல்கலைக்கழகத்துள் இராணுவ தலையீடு ஏன் ?
## மாவை சேனாதிராஜா



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களை அச்சுறுத்தியும், கொலைமிரட்டல் விடுத்தும் மர்மமான முறையில் பல்கலைக்கழக வளாகத்தில் சுவரொட்டிகள் ஓட்டப் பட்டுள்ளதாகவும், துண்டு பிரசுரங்கள் வெளியிடப் பட்டுள்ளதாகவும் செய்திகள் நாளேடுகளில் வெளிவந்துள்ளன. நேரடியாகவும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

அதற்கு மேலாக 16ஆம் திகதி முதல் “பல்கலைக்கழகம் மூடப்பட்டிருக்கும், விடுதிகளிலிருந்து மாணவர் வெளியேற வேண்டும்“ எனப் பதிவாளர் அறிவித்தல் கொடுத்திருப்பதாகவும், ஆனால் பதிவாளர் விடுமுறையில் இருப்பதாகவும் அவர் அந்த அறிவித்தலை மறுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்ததாக, “யாழ். பல்கலைக்கழகத் தரப்பினரை தன்னுடன் சந்திப்புக்கு வருமாறு, பல்கலைக்கழகத் துணைவேந்தர், பீடாதிபதிகள் மாணவர் தலைவர்களை யாழ். மாவட்ட இராணுவத் தளபதி அழைத்திருப்பதாகவும்“ இன்னொரு செய்தி வந்திருக்கிறது.

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் யாழ். பல்கலைக்கழகத்தில் மர்மமான சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், பல்கலைக்கழகத்தை மூடும் பதிவாளர் அறிவித்தல் யாவிலும் இராணுவத்தினரின் சம்பந்தம் இருக்கலாம் என்ற ஐயமே ஏற்படுகிறது.
எவ்வாறாயினும் இத்தகைய நடவடிக்கைகள், சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் பேராசிரியர்கள், மாணவர்களை அச்சுறுத்தும் கொலைமிரட்டல் விடுப்பது யார் ? பல்கலைக்கழக வளாகத்தில் இச் செயலைச் செய்வதற்கு யார் இடமளித்தார்கள் ?

இவ்வகையில் பல்கலைக்கழகம் மூடப்படுவதையும் இது தொடர்பில் நடைபெற்றுள்ள கொலை அச்சுறுத்தல்களையும் நாம் வன்மையாக கண்டிக்கின்றோம், இச்சம்பவங்கள் தொடர்பாக துணைவேந்தர் பதிலளிக்கக் கடமைப் பட்டுள்ளார்.
இச்சம்பவங்கள் தொடர்பாக உயர் கல்வி அமைச்சரைத் தொடர்பு கொண்டேன். அமெரிக்காவிலிருந்து இன்றிரவு தான் இலங்கை வருகிறார் என்று அறிந்தேன்.
உயர் கல்வி அமைச்சின் செயலாளரிடம் தொடர்பு கொண்டு பேசியுள்ளேன். அமைச்சருக்கு தெரியப்படுத்தும்படியும் கேட்டுள்ளேன்.

பல்கலைக்கழகத்தினுள், பல்கலைக்கழக நிர்வாகத்தில் இராணுவம் தலையிடவோ, நுழையவோ இடமளிக்கக் கூடாது. அப்படி ஏதும் அசம்பாவிதம் என்று எதுக்களில் இருப்பின் பல்கலைக்கழக நிர்வாகம், துணைவேந்தர் உயர் கல்வி அமைச்சுக்கு அறிவிக்கவேண்டும்.
இறுதியாகத் தேவைப்படின் போலீஸ் உதவியை நாடலாமே தவிர எக்காரணம் கொண்டும் இராணுவம் தலையிட இடமளிக்கக் கூடாது என யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரையும், உயர் கல்வி அமைச்சரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

இராணுவம் கல்வி நிறுவனங்களில் நுழைய அனுமதிக்க வேண்டாம்.
இத்தகைய இராணுவத் தலையிடுகள், மீண்டும் பயங்கரவாதத்தை துண்டுவதாகவும், மாணவர்களைக் கல்விச் சமூகத்தைக் கொலை அச்சுறுத்தலுக்கு ஆளாக்குவதும் அவர்களை அடிமைகளாக வைத்திருக்கவே அரசும், இராணுவமும் முயற்சிக்கிறது என்றே கருத இடமுண்டு. யாழ்.

மக்களின் கல்வியைச் சீரழிக்கும் சதித்திட்டமே இத்தகைய நடவடிக்கை எனக்கண்டிகின்றோம். சுதந்திரமான சூழல் கல்விப் பீடங்களில் இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றோம் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

## விபத்தில் மன்னார் உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள் காயம்

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் நோக்கி வந்து கொண்டிருந்த மன்னார் நகர சபைக்கு சொந்தமான வாகனம்

நேற்று(7) மாலை 3.30 மணியளவில் முழங்காவில் பகுதியில் விபத்துக்குள்ளாகியது

இதில் மன்னார் நகர சபை மற்றும் மன்னார் பிரதேச சபைகளின் செயலாளர்கள்

காயமடைந்து மன்னார் வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

நேற்று புதன் கிழமை(7) காலை யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றிற்கு சென்று விட்டு திரும்பும் வேளை மன்னார் நகர சபைக்குச் சொந்தமான வாகனத்தில்

மன்னார் நகர சபையின் செயலாளர் பிரிட்டோ லெம்பேட்,மன்னார் பிரதேச சபையின் செயலாளர் சி.எம்.ஜெசுனேசன்,

உள்ளூராட்சி மன்றங்களின் பிரதம பொறியியலாளர் எஸ்.முரளிதன் ஆகியோர் பயணித்துக்கொண்டிருந்த வாகனமே கடும் மழையின் காரணமாக முழங்காவில்

பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளனர்

-இதன் போது காயமடைந்த குறித்த வானத்தின் சாரதி உட்பட நான்கு பேர் மன்னார் பொது வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றன

-அதன் போது மன்னார் நகர சபைக்குச் சொந்தமான குறித்த வாகனம் கடும் சேதங்களுக்கு உள்ளாகியது

.மேலதிக விசாரனைகளை முழங்காவில் பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப் படுகிறது

## பொலிசாருக்கு இலஞ்சம் அகப்பட்டார் ஒருவர்

பொலிசாரின் பிடியிலிருந்த நபரை விடுதலை செய்வதற்கு பத்தாயிரம் ரூபாவை கப்பமாகப் பெற்ற நபர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றையதினம் மன்னார் பனங்கட்டு கொட்டு மேற்கில் இடம்பெற்றது. சம்பவம் பெற்றி தெரியவருவதாவது :-

கடந்த மாதம் மன்னார் பனங்கட்டு கொட்டு பிரதேசத்திலிருந்து ஒரு தொகை கஞ்சா பொலிசாரினால் மீட்கப்பட்டிருந்தது இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் அதேயிடதிதைச் சேர்ந்த ஒருவரை பொலிசாரால் மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தார்.

இதனையறிந்த குறித்த சந்தேக நபர் வீட்டிற்கு சென்று அவரது தாயாரிடம் பொலிசாரின் பிடியிலிருக்கும் உங்கள விடுவிப்பதற்கு பொலிசாருக்கு இருபத்தைந்தாயிரம் ரூபா வழ்ங்க வேண்டுமென்று சேட்டுக்கார் இதனையடுத்து தாயார் வீட்டிலிருந்த தொலைக்காட்சிப் பெட்டியை இன்னொருவரிடம் அடகு வைத்து ரூபா பத்தாயிரத்தை குறித்த சந்தேக நபரிடம் வழங்கியுள்ளார்.
பொலிசாரின் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டார். என்னும் பணதிதைப் பெற்றமை தொடர்பாக அவர் பொலிசாரிடம் விசாரித்துள்ளார்.

அப்பொழுதே பொலிசாருக்கு தமது பெயரைப் பயன்படுத்தி இன்னொருவர் பணத்தைப் பெற்றுக் கொண்டமை தெரிய வந்துள்ளது. விசாரணையின் பின்னர் சந்தேக நபர் கைது செய்யப்பட்டு மன்னார் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இவரை எதிர்வரும் இருபதாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் ஆனந்தி கனகரட்ணம் உத்தரவிட்டார். மன்னார் பொலிசார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர் பனங்கட்டு கொட்டு மேற்கைச் சேர்ந்தவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியவன்
PUTHEYAVAN
ஊருக்கு நல்லது சொல்வேன்-உண்மை அறிந்து சொல்வேன்
இல:-87 பிரதான வீதி, மன்னார்.
தொலைபேசி இல. 0233238444
Email:putheyavannews@gmail.com

# அச்சுவேலி கொலை தமிழரின் பண்பாட்டியலா?

தமிழ்மக்கள் உயர்ந்த ஒழுக்கவியல் பண்பாட்டுடன் காலங்காலமாய் மரபு தவறாமல் வாழ்வியல் தொடர்கிறார்கள்.

உலகத்திற்கே ஒப்புவமையிட்டவர்கள் எமது பண்பாட்டியலை மேலை நாட்டவர்கள் கண்டு வியப்பதுண்டு அந்தளவிற்கு குடும்ப, சமூக கட்டுப பாடுகளையும் வாழ்வியல் வரையறை களையும் தன்னகத்தே கொண்டுள்ள இந்த இனம் இவ்வளவு கேவலமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை மிகவும் மன வேதனைக்குரிய விடயமாகும்.

இவ்விதமான பிற்போக்குத்தனமான செயற்பாட்டை தமிழர்களும் செய்கிறார்கள் என்பது வெட்கித் தலை குனிய வேண்டியதாக உள்ளது தன்னுடைய குடும்பத்தையே கொலை செய்யுமளவிற்கு வக்கிர புத்தி ஏற்பட்டிருப்பது ஏற்புடையதா?

சுய நினைவில்தான் இச்சம்பவம் நடைபெற்றதா அல்லது போதையில் தான் செயற்படுத்தப்பட்டதா இவர்களும் மனிதர்களா? விலங்குகளுக்கும் இவர்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

முள்ளிவாய்க்காலில் சிங்களக் காடையர்கள் அப்பாவித் தமிழர்களை கொன்று குவித்தமைக்கு ஒப்பானதாகவே இச்சம்பவம் காணப்படுகின்றது எந்த விதமான பின்விளைவுகளையும் சிந்திக்காமல் இந்த துணிகரக் கொலையில் ஈடுபட்டிருப்பது சர்வசாதாரணமில்லை.

ஏனென்றால் மனிதனுக்கு அந்தளவிற்கு வக்கிரபுத்தி ஏற்பட்டுள்ளது அவமானமானதே அதுவும் மனிதக் கொலை ஈவிரக்கமின்றி மிகக் கேவலமான முறையில் வெட்டியுள்ளர் மனிதாபிமான முள்ளவர்கள் எவரும் மிருகங்களைக் கூட இவ்வாறு கண்டதுண்டமாக வெட்ட மாட்டார்கள்.

இவர்களுக்கு சாதாரண தண்டனை வழங்கக் கூடாது மத்திய கிழக்கில் உள்ள சில நாடுகளில் வழங்கும் தண்டனை போல் வீதியிலே குளிவெட்டி கழுத்துப் பகுதிவரை புதைத்துவிட்டு வீதியில் போய்வருபவர்களால் கல்லால் எறிந்து மரணதண்டனை நிறை வேற்ற வேண்டும்.

அவ்வாறு செய்தால் தான் இவ்வாறான மிருகச் செயலில் ஈடுபட எதிர்காலத்தில் யோசிப்பவர்களுக்கும் நல்லபாடமாக இருக்கும்.

எனவே எதிர்காலத்திலாவது எவரும் அறிந்தும் அறியாமலோ இவ்வாறான செயலில் ஈடுபடக்கூடாது என்பதே பொதுவான வேண்டுகை என்பதுடன் இது தனிநபருக்கு மட்டுமல்ல தமிழினத்திற்கே அவமானமாகும் ஆகவே சட்டம் விரைந்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# கவின் கலைகளில் மீளெழத்துடிக்கும் கிளிநொச்சி



2009ன் முன்பு கிளிநொச்சி பிரதேசத்தில் விடுதலைப்புலிகளில் கலைபண்பாட்டு பிரிவின் கீழ் கவின் கலைகளை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு கலைக்குழுக்கள் இயங்கி இளம் பராயத்தினரின் அரங்கேற்றங்களையும் கலை வெளியீடுகளையும் வெளிக் கொண்டு வந்திருந்தன.போருக்குப்பின் போரினால் ஏற்பட்ட வடுக்கள் காரணமாக கலைகளை வெளிக் கொண்டுவருதலில் இருக்கின்ற நெருக்கு வாரங்கள் காரணமாக கவில்கலை அமைப்புக்கள் இயங்கு வதில் பின்னடைவு நிலை காணப்பட்டு வந்தது.எனினும் தற்போடு வடமாகாணசபை தேர்தலின் பின்பு மெல்ல மெல்ல கவின்கலை மேம்பாட்டில் அக்கறையுள்ள குழுக்களின் வெளிப்பாடுகள் அரங்கேறுவதை காணக்கூடியதாக உள்ளது.

இதன் ஒரு வெளிப்பாடாக அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட கிளிநொச்சி பண்டிதர் பரந்தாமன் கவின்கலைகல்லூரி தனது மாணவர் மன்ற கலைவெளிப்பாடுகளை அரங்கேற்றியிருந்தது.இதில் பிரதம விருந்தினராக முதுபெரும் மிருதங்க வித்வான் ஜயாத்துரை சிவபாதம் மற்றும் முதுபெரும் பாடகி பார்வதி சிவாபாதம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.பல்வேறு பண்பாட்டு கலை நிகழ்வுகளை அரங்கில் மாணவர்கள் நிகழ்த்தியதை காணக்கூடியதாீக இருந்தது.இதே வேளை விழிப்புலனற்ற மிருதங்க வித்துவான் கிருஸ்ணபிள்ளை சிறிகரன் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டார்.

# இணைந்த வடகிழக்கே கூட்டமைப்பின் கோட்பாடு

## செல்வம் அடைக்கலநாதன்

(மட்டக்களப்பு நிருபர்)

தமிழ் தேசியக் கூட்டமைப்பினைப் பொறுத்த வரையில் இணைந்த வடகிழக்கிலேதான் பயணிக்க வேண்டும் என்ற சிந்தனையில் இருந்து கொண்டிருக்கின்றது. அந்த வகையில் சிறு சிறு தவறுகளை மறந்து போயும் விடக் கூடாது. எமது மக்கன்ள ஒன்றிணைத்து கொண்டு செல்ல வேண்டும். கிழக்கு வடக்கு என்ற வேறுபாடுகள் பற்றி கருணா, பிள்ளையான் போன்றோர்களால்தான் பேசப்படுகின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு கிழக்கைப் பிரித்துப் பார்கின்றது என்ற செய்தியினையும் கருணா, பிள்ளையான் போன்றோர்கள்தான் சொல்கின்றார்கள்.

என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறப்பினருமான செல்வம் அடைக்கலநான் தெரிவித்துள்ளார்.கடந்த போராட்ட காலத்தில் பல போராட்ட இயக்கங்கள் ஆரம்பிக்கப் பட்டாலும். நாங்கள் பார்வையாளர்களாக இருக்கவில்லை நாங்கள் வகைப்படுத்தி மக்களைக் காப்பாற்றினோம். கடந்த காலத்திலிருந்து இன்றுவரை நாங்கள் ஒற்றுமையினை நேசித்து வருகின்றோம்.

அந்த வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினை உருவாக்குவதில் எது தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் கட்சியின் பங்களிப்பானது மிகப் பெரிதானது. தமிழ் தேசியக் கூட்டமைப்பினை உருவாக்குவதற்கு பத்திரிகையாளர்களும் அவர்களது முழு ஆதரவுகளை வழங்கினார்கள் இவற்றுக்கான ஆரம்ப வித்தாக செயற்பட்டவர்கள்தான் மறைந்த மூத்த பதிரிகையாளர்களான சிவராம், மற்றும் நடேசன். மற்று வெளிநாட்டிலே வசிக்கின்ற தவராசா, ஜெயானந்தமூர்தி போன்றவர்கள். இவ்வாறு பல சிக்கல்களுக்கும் மத்தியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினை உருவாக்கியுள்ளோம்.

எமது போராட்டமும் இந்தியாவும் பின்னிப்பிணைந்த ஒன்று என மறைந்த தலைவர் ஸ்ரீ சபாரெத்தினம் அவர்கள் அன்றய காலகட்டத்தில் சொல்லியிருந்தார். ஆனால் இந்தியாவின் இராஜதந்திர நிலையினை உலக நாடுகள் தங்களுக்கு ஏற்றாற்போல் பார்க்கின்றன. இரண்டாவதுதான் எமது பிரச்சனைகளைப் பார்க்கின்றனர். அதேபோல் இந்தியாவும் தன்னுடைய நலனுக்காக சில முடிவுகளை மாற்றி வருகின்றது. ஜெனிவாவிலே இந்தியா நடுநிலைமை வகித்தது என்பதற்காக இந்தியாவை நாம் புறக்கணித்து எந்த விதத்திலும் செயற்பட முடியாது.

இந்தியாவிலே வருங்காலத்திலே ஆட்சிமாற்றங்கள் வரலாம் அப்போது எமது பிரச்சனைகளை எடுத்தியம்பலாம் எனெனில் இலங்கையில் நடைபெற்ற போராட்டம் திசை திருப்பப்பட்டது யாரால் என்பது அனைவருக்கும் தெரியும். எனவே இந்தியோவோடு பயணித்தால்தால் எமது மக்களுக்கான அரசியல் தீர்வுக்கு வழிவகுக்கும்.எமது இயக்கத்தினை எமது மறைந்த தலைவர் என்றும் ஒன்றுமையுடன் வழிநடாத்திச் சென்றார் அவரின் வழிநடாத்தலில் வந்த நாங்கள் ஒற்றுமையினை இன்றும் பேணிவருகின்றோம். தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் பிரச்சனைகள் வருகின்ற போதிலெல்லாம் எமது கட்சி பல விட்டுக்கொடுப்புக்களைக் செய்து ஒற்றுமையினைப் பேணி வருகின்றது.

எமது மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புத்தான் எமக்கு விடுதலை பெற்றுத்தருவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கின்றார்கள். எமது ஆரம்ப காலத்தில் இணைந்த வடகிழக்கு ஒரு ஈழ தேசம் என நடந்தேறியிருக்கின்றன.

தற்போதைய காலகட்டத்தில வடக்கு மாத்திரம்தான் பேசப்படுகின்றது கிழக்கு பற்றி கதைக்கப் படுவதே இல்லை என்ற கருத்தும் சிலரிடத்தில் நிலவி வருகின்றன. வடக்கில் அதிக பாதிப்புக்கள் அழிவுகள் அட்டூழியங்கள் அதிகம் நடைபெற்றன. இவற்றினை எமது முதலமைச்சரினை வைத்து செயற்பாடுகளை மேற்கொணடு வருகின்றோம் கிழக்கில் எமது முதலமைச்சர் ஒருவர் இருப்பாரேயானால் இவ்வாறான கருத்துக்கள் வந்திருக்கமாட்டாது. கிழக்கில் கடந்த முறை நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இன்னும் ஒரு ஆசனத்தினை பெற்றிருந்தால் கிழக்கு மாகாண சபையும் எமது ஆட்சிக்குள வந்திருக்கும்.

எவ்வாறாயினும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினைப் பொறுத்த வரையில் இணைந்த வடகிழக்கிலேதான் பயணிக்க வேண்டும் என்ற சிந்தனைவேண்டும். அந்த வகையில் சிறு சிறு தவறுகளை மறந்து போயும் விடக் கூடாது. எமது மக்களை ஒன்றிணைத்து வேறுபாடுகள் பற்றி கருணா, பிள்ளையான் போன்றோர்களால் தன் பேசப்படுகின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு கிழக்கைப் பிரித்துப் பார்கின்றது என்ற செய்தியினை கருணா, பிள்ளையான் போன்றோர்கள்தான் சொல்கின்றார்கள். மக்களை மதம் மற்றும், பிரதேச வாதம் போன்றவற்றினைக் கூறி மக்களை திசை திருப்பலாம்.

இவற்றினை அவர்கள்தான் கூறிவருகின்றார்கள் எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு மாற்றான் தாய் என்ற பேதங்ளைக் களைந்து செயற்பட்டுக் கொண்டு வருகின்றது. எம்மைப் பெறுத்தமட்டில் எமது மக்களுக்கு நிம்தியாக ஒரு வாழ்க்கையினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் உறுத்தியாக இருந்து வருகின்றோம். இதுவரை காலத்திற்கும் இலங்கை அரசாங்கத்துடன் பலமுறை பேசியிருக்கின்றோம், இதுவரைக்கும் எந்த தீர்வும் கிடைக்கப் பெறவில்லை ஆனால் தற்போது பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வருமாறு அழைக்கின்றார்கள். ஏற்கனவே பல பாராளுமன்ற தரிவுக்குழுக்கள் இடம்பெற்றிருக்கின்றன. அவைகளெல்லாம் ஒரு குப்பைத் தொட்டியிலே போட்ட நிகழ்வுதான்.

ஜனாதிபதி உருவாக்கிய கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்க ஆணைக்குழுவினதும் பரிந்துரைகளைக்கூட அரசாங்கத்தால் அமுல்படுத்த முடியாதுள்ளது. எனவே இந்த அரசிடமிருந்து நம்பிக்கையிழந்த நிலையில் நாம் இப்போது உலக நாடுகளிடத்தில் தெரிவித்திருக்கின்றோம்.

எமது மக்களின் வாழ்வாதாரத்தின் வயிற்றில் அடிக்கும் செயற்பாடுகளே தற்போது வடக்கு கிழக்கு பகுதிகளிலே செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எமது மக்களின் வயல் மற்றும் தோட்டக் காணிகளை இராணுவம் சுவீகனித்துக் கொண்டிருக்கின்றது, கால்நடைகளை பிடிக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவமாதாவின் வணக்கமாத சிந்தனை
## திருச்சபை தந்தையர்களின் பார்வையில் மரியா

இரண்டாம் நூற்றாண் டில் வாழ்ந்த யஸ்ரின் எனும் திருச்சபை பிதாவானவர் மரியா ளை ஏவாளுடன் ஒப்பி டுகிறார். இறைவன் தந்த அருள்வாழ்வு ஏவாள் மூலமாக அழிக்கப்பட்டதாகவும், இரண்டாவது ஏவாளா கிய மரியாள் மூலமாக அவ்வருள் மீண்டும் மனுக்குலத்திற்கு கிடைப்பதாகவும் எடு த்துரைக் கின்றார்.



ஏவாள் பாம்புருவான கெட்ட தூதனின் வார்த்தையை நம்பினா ள். கன்னிமரியாள் கபிரியேல் தூதரின் வார்த்தையை நம்பி விசுவசித்தாள். ஒரு பெண் வார்த்தையை நம்பி இழைத்த தீமை யை மற்றொரு பெண் வார்த்தையை நம்பி பெற்றுக் கொண்டாள். ஏவாளின் கீழ்ப்படியா மையால் விளைந்த முடிச்சு மரியாளின் கீழ்ப்படிதலால் அவிழ்க்கப்பட்டது இவ்வாறாக புனித ஜஸ்ரின், தேர்த்துல்லியன், புனித ,ரேனியூஸ் போன்றவர்கள் ஏவாளோடு புனித மரியாளை ஒப்பிட்டு அமல உற்பவ மறையுண்மையைப் போதிக்கிறார்கள். மரியாளின் அமல உற்பவம் பற்றிய உண்மையை தெளிவுற எடுத்தியம்பியவர் பிரான்சிஸ்கன் சபைத் துறவி அருளப்பர் டன்ஸ் ஸ்கொட்டஸ் என்பவரே. இறைவனின் தாய் எனப்படுபவள் ஒருகணம் கூட பாவத்தின் பிடியில் இருக்கவே முடியாது என்று பறைசாற்றினார்.

மரியாளின் அமலோற்பவம் மனிதக் கண்டு பிடிப்பு அல்ல. மனித புத்தியினால் இதற்கு விளக்கம் காண்பது கடினமானது. இறைவனின் திட்டத்தில் தோன்றிய இந்த விசுவாச் சத்தியத்தை திருத்தந்தை 9ம் பத்திநாதர் 1854ம் ஆண்டு மார்கழி மாதம் 8ம் திகதி, முழுக்கத்தோலிக்கத் திருச்சபையும் ஏற்றுக் கொள்ளும் விசுவாச சத்தியமாக பிரகடனம் செய்தார். இதனை நாம் விசுவாசத்தினால்தான் ஏற்றுக்கொள்ள முடியும். மிரியாள் தனது பிறப்பினாலே மட்டுமல்ல, தனது தூய்மையான வாழ்வினாலும் மாசற்றவளாகத் திகழ்ந்தாள்.

ஆனால் இன்றைய சமுதாயத்தில் பல தவறான போதனைகளினாலும், முரண்பாடுகளினாலும், விளக்கக் குறைவுகளினாலும், அறியாமையினாலும் அன்னையின் புனிதத் தன்மையில் வினா எழுப்பும் அவவிசுவாசிகளுக்கு, உண்மையைப் புரிய வைப்பது கத்தோலிக்க திருச்சபையில் அங்கம் வகிக்கும் எம் எல்லோரினதும் உயரிய பொறுப்பாகும். விஞ்ஞானத்தின் விஞ்சிய வளர்ச்சியினாலும், நாகரீகத்தின் அதி நவீன முன்னேற்றத்தினாலும், அறிவு விருத்தியினாலும் கடவுளே இல்லை என்று வாழும் மனிதர்கள் மத்தியிலும், மனித வல்லமையால் எதனையும் சாதிக்கலாம் என எண்ணி மனிதத்தை நாசம் பண்ணும் மனிதர்கள் மத்தியிலும், மண்டை ஓடுகளை பிரசவிக்கும் மதவெறியர்கள் நடுவிலும் வாழும் அன்னையின் அன்புப் பிள்ளைகளாகிய நாம், அன்னையின் மாசற்ற வாழ்வினூடாக தூய்மையான வாழ்விற்கு அழைக்கப்பட்டுள்ளோம். இவ் அழைப்பை உணர்ந்து எம் வாழ்வை அன்னையின் பாதையில் அர்ப்பணித்து வாழ்ந்தால் ,றைவனின் அருட்கொடைகளை நிறைவாக பெற்று வாழலாம். நாமே அமலோற்பவம் என்று கூறும் அன்னையின் குரலொலியையும் கேட்டு மகிழலாம்.

# சம்பூர் இடம்பெயர்ந்த மக்களுக்கு இழப்பீட்டுக்காக 300 மில்லியன் ஒதுக்கீடு!

இலங்கை அரசு, சம்பூரில் உயர் பாதுகாப்பு வலயத்துக்காக மேற் கொள்ளப்பட்ட நிலக்கையகப்படுத்தல் முயற்சியில் நிலமிழந்த மக்களுக்கு, இழப்பீடு வழங்க 300 மிலியன் ரூபாய் ஒதுக்கியிருப் பதாகத் தெரிவித்திருக்கிறது.
இலங்கை உச்சநீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு விசாரணையில் அரசு இந்தத் தகவலைத் தெரிவித்தது.

சம்பூரில் இந்தப் பிரச்சினை காரணமாக இடம்பெர்ந்தோர் தாக்கல் செய்த மனு குறித்த விசாரணையில் அரச வழக்கறிஞர் இதனை நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அரசின் இந்தத் திட்டத்தின்படி, சம்பூரிலிருந்து இடம்பெர்ந்தோர், தமது கையகப்படுத்தப்பட்ட காணிகளுக்கு பதிலாக மாற்று நிலங்களைப் பெற முடியும். அதை விரும்பாதோருக்கு நஷ்டஈட்டுத் தொகை தரப்படும் என்றார் அரச வழக்கறிஞர்.

ஆயினும் இவ்வாறு காணிகளை கையகப்படுத்துவது சட்டத்திற்கு மாறான ஒரு செயல் என மனித உரிமைகள் சம்பந்தமான வழக்குகளில் ஆஜராகும் வழக்கறிஞர் குணரத்ன வன்னிநாயக்க தெரிவித்தார்.

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் காணி சட்ட விதிமுறைகளின் படி, தனிப்பட்ட நிலத்தை கையகப்படுத்துவதற்கு முன்பு விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். ஆயினும் இங்கு அவ்வாறான விசாரணைகள் எதுவும் நடத்தப்படவில்லை.

எனவே எதிர் காலத்தில் காணிகளை கையகப்படுத்த வேண்டுமானால் பொதுவாக அமுல்படுத்தப்படும் சட்ட விதிமுறைகளுக்கு அமைய அதனை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார் வழக்கறிஞர் குணரத்ன வன்னிநாயக்க.

ஆயினும் அரச வழக்கறிஞரின் கருத்துகளை ஏற்றுக்கொண்ட நீதிபதி மொஹான் பீரிஸ், மாற்று காணிகள் மற்றும் நஷ்ட ஈடுகள் பெற்றுக்கொள்ள விரும்பும் இடம்பெர்ந்தோர் சம்பந்தமான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு அரச தரப்பிற்கு உத்தரவிட்டார்.

பின்பு வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜுன் 9ம் தேதி வரை ஒத்திவைத்த தலைமை நீதிபதி மொகான் பீரிஸ், அன்றைய தினம் இந்த தீர்வு திட்டம் சம்பந்தமாக மனுதாரர்களின் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்படுமென்றும் தெரிவித்தார்.

## இன்று

**சித்திரை - 25 வியாழக்கிழமை 08.05.2014**

திதி: அமிர்தசித்தம் பி.ப 1.50
நட்சத்திரம்:கார்த்திகை மு.ப 10.38

சுப நேரம்:7.25 - 8.55 வரை
இராகு காலம்:1..25 - 2.55 வரை
எமகண்டம்: 5.55 - 7.25வரை



## இன்றைய பலன்
08.05.2014
### வழங்கியவர் மணிகண்டன்




இன்று, சிலர் உங்களிடம் நட்பு பாராட்டுவதாக தெரிவிக்க, தேவையற்ற வி'யங்களை வலிய வந்து பேசுவர். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற. கூடுதல் உழைப்பு உதவும். பிறர் பார்வையில் படும்படி. அதிக பணம் செலவு செய்ய வேண்டாம். குடும்ப உறுப்பினர்களிடம், ஒற்றுமை அவசியம்.




இன்று, நிறைவேற்ற வேண்டிய பணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். எவரிடமும் தர்க்கவாதம் பேசக் கூடாது. தொழிலில் அனுகூல நன்மைகளை பாதுகாப்பது நல்லது. அதிக பயன் தராத பொருள் வாங்க வேண்டாம். ஓய்வு நேரத்தில் இசைப்பாடலை ரசிப்பதால். மனதில் புத்துணர்வு பிறக்கும்.




இன்று, நிறைவேற்ற வேண்டிய பணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். எவரிடமும் தர்க்கவாதம் பேசக் கூடாது. தொழிலில் அனுகூல நன்மைகளை பாதுகாப்பது நல்லது. அதிக பயன் தராத பொருள் வாங்க வேண்டாம். ஓய்வு நேரத்தில் இசைப்பாடலை ரசிப்பதால், மனதில் புத்துணர்வு பிறக்கும்.




இன்று, மனதில் அதிக நற்சிந்தனை உருவாகும். பிறருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில்,வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். உபரி பணவருமானம் கிடைக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும்.




: இன்று, பிறரது பேச்சால் மனவருத்தம் கொள்வீர்கள். குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு நம்பிக்கை தரும். தொழில். வியாபாரத்தில் சில சீர்திருத்தம் அவசியமாகும். உணவுப்பொருள் தரம் அறிந்து உண்ணவும். இயந்திர தொழிற்சாலை பணியாளர்கள், பாதுகாப்பு நடைமுறை கவனமுடன் பின்பற்ற வேண்டும்.




இன்று, மனதில் இறை பக்தியின் மீதான நம்பிக்கை கூடும். உயர்ந்த எண்ணங்களை செயல்படுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடர் விலகி, வளர்ச்சி உண்டாகும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். உறவினர் சில பொறுப்புக்களை தந்து. நிறைவேற்றக் கோருவர்.




இன்று, உங்கள் மனதில் இருந்த தயக்கம் விலகி, தைரியம் வளரும். பணிகளில் கூடுதல் ஆர்வம் கொள்வீர்கள். தொழில்.வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். அதிர்'டகரமாக உபரி பண வருமானம் கிடைக்கும். குடும்பத்தின் தேவைகளை. தாராள பணச்செலவில் நிறைவேற்றுவீர்கள்.




இன்று, உங்களின் எதார்த்த பேச்சு, பிறர் மனதை புண்படுத்தலாம். தன் குறையை உணர்ந்து அவர்கள் சமாதானப்படுத்துவீர்கள். தொழில்,வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். எதிர்பார்த்த பணவரவு கிடைப்பதில், தாமதம் இருக்கும். நண்பர், உறவினரின் அதிக விலையுள்ள பொருட்களை பாதுகாக்கும் பொறுப்பு ஏற்க வேண்டாம்.




இன்று, மனதில் புதிய ஞானம் பிறக்கும். சவால்களை வென்று சாதனை புரிவீர்கள். தொழில் வளர்ச்சி அபரிமிதமான இருக்கும். கூடுதல் பணவரவில், நிலுவை பணக்கடன் அடைப்பீர்கள். பெற்றோர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.




இன்று, கடினமான செயல்களையும் உங்கள் திறமையால் எளிதாக நிறைவேற்றுவீர்கள். சக பணியாளர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சி இலக்கு, திட்டமிட்டபடி நிறைவேறும். சராசரி பணவரவுடன் நிலுவைப் பணமும் வசூலாகும். உடல்நல ஆரோக்கியம் பலம் பெற, சத்து நிறைந்த உணவுகளை உண்பீர்கள்.




இன்று, உழைப்பின் மீதான நம்பிக்கை வளரும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில்,வியாபாரம் வளர்ச்சி பெற தேவையான மாற்றம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை செழித்து லாப விகிதம் அதிகரிக்கும். கூடுதல் சொத்து சேர்க்கை பெற அனுகூலம் உண்டு.




இன்று, உங்கள் நண்பர், உறவினர்களின் பேச்சு சங்கடம் தருவதாக இருக்கும். இருப்பினும், பெருந்தன்மையுடன் நடந்து கொள்வீர்கள். தொழில்,வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை இலக்கை நிறைவேற்ற கூடுதல் உழைப்பு அவசியமாகும். பணவரவில் சிக்கன செலவுகளை மேற்கொள்வீர்கள். போக்குவரத்தில் கவன நடை நல்லது.

# சிந்திக்க சில வரிகள்

சொற்கள்
தேனீக்களைப் போன்றது
அவைகளில்
தேனும் உண்டு
கொடுக்கும் உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயக்க மருந்து கொடுத்து கொள்ளை பஸ் நடத்துனர் கைது

(சிலாபம்)
பெண்களை ஏமாற்றி கொள்ளையிட்டு வந்த பஸ் நடத்துனர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். சிலாபம் பிரதேசத்தில் வைத்து குறித்த பஸ் நடத்துனர் கைது செய்யப்பட்டுள்ளார். பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பெண்களை ஏமாற்றி மயக்க மருந்து கொடுத்து, பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

குறித்த பஸ் நடத்துனர் பத்துக்கும் மேற்பட்ட பெண்களின் பெறுமதியான நகைகள், செல்லிடப் பேசிகள் உள்ளிட்ட பொருட்களை கொள்ளையிட்டுள்ளார். மேல் மாகாணத்தைச் சேர்ந்த பத்து பெண்களிடமிருந்து கொள்ளையிடப்பட்ட நான்கரை லட்ச ரூபா பெறுமதியான தங்க நகைகளை பொலிஸார் மீட்டுள்ளனர்

## இலங்கையின் பயங்கரவாதிகள் பட்டியலில் தமிழகத்தில் 32 தமிழ் அகதிகள்

(கொழும்பு)
பயங்கரவாதிகள் எனக் கூறி இலங்கை அரசால் தடை விதிக்கப்பட்ட 424 பேரில், 32 பேர் தமிழகத்தில் அகதிகளாக வசித்து வருவதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது. இவ்வாறு தினமணி நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் இடம்பெற்றுள்ள பெயர் பட்டியலை ஏற்றுக் கொள்வதாக இந்தியா அண்மையில் அறிவித்ததால், அவர்களின் நிலை என்னவாகும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதற்கிடையே, இலங்கை தடை விதித்துள்ள நபர்கள் பற்றிய விவரங்கள், பின்புலத்தை ஆராயும் நடவடிக்கையில் மத்திய உளவுத் துறை தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இலங்கை அரசு, இந்திய வெளியுறவுத் துறை மூலம் மத்திய உள்துறைக்கு அனுப்பியிருக்கும் பட்டியலில் 32 அகதிகள் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் அந்நாட்டு இராணுவத்துக்கும் இடையே நடந்த போரின் போது வெவ்வேறு காலகட்டங்களில் இவர்கள் அகதிகளாக இந்தியாவில் தஞ்சமடைந்தவர்கள்.

இவர்களை "இந்தியாவில் வசிப்பவர்கள்" என்று அரசாணையில் இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

## தம்புள்ளை பள்ளிவாசல்கள் இடிக்கப்படுகிறது சுமங்கல தேரரின் நேரடி கண்காணிப்பில்



(கொழும்பு)
சர்வதேச மட்டத்தில் பெரும் கவனயீர்ப்பைப் பெற்ற தம்புள்ளை பள்ளிவாசலின் ஒருபகுதி நேற்றிரவு வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளால் இடிக்கப்பட்டுள்ளது.

மேலும் பள்ளிவாசல். கட்டடத்தை அண்டிய கட்டடங்கள் பாதை அபிவிருத்திக்காக பெக்கோ இயந்திரங்கள் மூலம் அகற்றப்படுவதாகவும், பெக்கோ இயந்திரங்கள் பள்ளிவாசலை அண்டியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவற்றை பொலிசாரின் பாதுகாப்புடன் இனாமளுவே சுமங்கல தேரர் நேரடி யாக நின்று வழிநடத்திவருவ தாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. புனித பூமி அபிவிருத்தி என்ற பெயரில் தம்புள்ளைப் பள்ளிவாசலை ஊடறுத் துச் செல்லும் வகையில் வீதியொன் றை திட்டமிட்டு, தற்போது பள்ளிவா சலின் இரு மருங்கிலும் இயந்திரங் களைக் கொண்டுவந்து நிறுத்தியுள்ள தாக அப்பள்ளிவாசல் நிருவாக சபைச் செயலாளர் றஊப் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பள்ளிவாசல் பராமரிப்பாளர் (கதீப்) பயன்படுத்தும் மலசலகூடம் மற்றும் அதனைத் தொடர்ந்துள்ள கட்டிடங்கள் தற்போது தகர்க்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் பள்ளிவாசலைத் தகர்க்காமல் வீதியை வளைத்துக் கொண்டு போவதாக வீதி அதிகார சபை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் தெரிவித்துள்ளதாகவும் கூறினார்.

எனினும் இன்று அதிகாலைக்குள் அப்பிரதேசத்திலிருந்து பள்ளிவாசலை இடித்து தரைமட்டமாக்கிவிடும் வகையில் இனாமளுவே சுமங்கல தேரரின் நடவடிக்கைகள் அமைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

## குராம் ஷேக் துப்பாக்கி சூட்டில் இறக்கவில்லை மருத்துவ சான்றிதழ்

(கொழும்பு)
பிரித்தானிய பிரஜையான குராம் ஷேக் துப்பாக்கி சூட்டு காயங்களால் இறக்கவில்லை என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2011ம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் திகதி தங்காலையில் வைத்து குராம் ஷேக் கொலை செய்யப்பட்டும்,

அவரது நண்பி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பான நீதிமன்ற விசாரணை நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்றது. இதன்போது சாட்சியமளித்த முன்னர் தங்காலை வைத்தியசாலையில் நீதிமன்ற மருத்துவ அதிகாரியாக செயற்பட்டவரும் தற்போது பதுளையில் பணியாற்றுபவருமான வைத்திய கலாநிதி கித்சிரி விஜயசேகர, தமது பரிசோதனையின் படி இந்த மரணம் துப்பாக்கி சூட்டினால் ஏற்படவில்லை என்று குறிப்பிட்டார்.

எனினும் அவரின் உடலில் காணப்பட்ட 42 காயங்கள் அதிலும் மூக்கு பகுதியில் காணப்பட்ட காயங்களே மரணத்துக்கு காரணமாக இருக்கலாம் என்று கித்சிரி சுட்டிக்காட்டினார். மரணமானவரின் நெற்றியில் டி 56 ரக துப்பாக்கி மூலமான காயம் காணப்பட்டது. இந்த நிலையில் இரவு உணவை முடித்துக் கொண்ட பின்னர் சுமார் அரை மணி நேரத்திலேயே இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக நீதிமன்ற மருத்துவ அதிகாரி சாட்சியமளித்தார்.

## பாகிஸ்தான் உளவாளியான இலங்கையரை ஆந்திர பொலிஸார் விசாரணை

(கொழும்பு)
தமிழக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தீவிரவாதி என்று குறிப்பிடப்பட்டுள்ள இலங்கையரை ஆந்திர பிரதேச பொலிஸார் விசாரணைசெய்துள்ளனர்.

இதனை ஆந்திர பிரதேச உதவி பொலிஸ் அதிகாரி பிரசார ராவ் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த விசாரணைகளின் மூலம் தீவிரவாதிகள் சென்னையிலும் பெங்களூரிலும் குண்டுகளை வெடிக்க திட்டமிட்டார்களா? என்பது குறித்து தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை என்று ராவ் குறிப்பிட்டார்.

இதேவேளை தேசிய புலனாய்வு பிரிவினர் ஆந்திராவின் ராஜீவ் காந்தி விமான நிலையத்தில் கார் குண்டு தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்ற எச்சரிக்கையில் அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கனடியப் பாராளுமன்றத்தில் "மே 18" நினைவு நாள் அனுஷ்டிப்பு

(கனடா)
கனடாவின் தலைநகரான ஒட்டாவாவில் அமைந்துள்ள கனடியப் பாராளுமன்றத்தில் மே 18 நினைவு தினத்தை அனுஸ்டிக்கும் ஏற்பாட்டை கனடிய மனித உரிமை மையம் ஏற்பாடு செய்துள்ளது.

2009ம் ஆண்டில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது கொல்லப்பட்ட சகலரையும், அப்போரினால் அநாதரவாக்கப் பட்டவர்களிற்கான விடிவு வேண்டியும் பாராளுமன்றத்தின் மத்திய கட்டிடத் தொகுதியில் நடைபெறவுள்ள இந்த நிகழ்விற்கு சகல அரசியற்கட்சிகளைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மே மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக் கிழமையாக இருக்கின்ற காரணத்தால் அன்று பாராளுமன்றம் மூடப்பட்டிருக்கும். எனவே அதற்கு முற்கூட்டி, மே மாதம் 14ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் 1.30 மணி வரை இந்த நிகழ்வு இடம்பெறும் எனவும் கனடிய மனிதஉரிமை மையம் தெரிவித்துள்ளது.

கனடியப் பாராளுமன்றத்தினுள் அமைந்துள்ள பிரபல்யமான பொது நலவாய நாடுகள் அறையில் அமர்வு இடம்பெறுமெனவும், மதிய உணவு நேர இடைவேளையின் போது இந்நிகழ்வு இடம்பெறுவதால் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்றுவார்கள் எனவும் கணிப்பிடப் பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக் கட்டமைப்பின் கணிப்பீட்டின் பிரகாரம் இறுதிப் போரில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்பதோடு போரின் போதான தர்மங்கள் ஏதும் கடைப்பிடிக்கப்படவில்லை என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இதனை அனுசரணையாக வைத்து மேற்கொள்ளப்படும் இந்த நினைவு நிகழ்வில் கலந்து கொள்வதற்கான அழைப்பை அனைத்து கனடாவாழ் தமிழர்களுக்கும் விடுத்துள்ள கனடிய மனிதவுரிமை மையமானது, தற்போதைய கனடிய அரசின் முயற்சிகளுக்கு மேலும் வலுச்சேர்க்கும் முகமாக கனடாவிலுள்ள இதர தமிழ் அமைப்புக்களையும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந் நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புவர்கள் contact@chrv.ca மூலமாகவோ அல்லது 416-644-7287 என்ற தொலைபேசி இலக்கத்தின மூலமாகவோ தங்களது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பாகிஸ்தானிய தீவிரவாதிகளுக்கு இலங்கையில் பயிற்சியளிக்கவில்லை

(கொழும்பு)
இலங்கையில் இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானிய தீவிரவாதிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படுவதாக வெளியான தகவலை இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு மீண்டும் ஒருமுறை மறுத்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சு இது தொடர்பாக நேற்று மாலை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், தமிழக அரசியல்வாதி ஒருவர், இலங்கையில் இந்தியாவுக்கு எதிராக பாக்கிஸ்தானிய தீவிரவாதிகளுக்கு பயிற்சியளிக்கப்படுவதாக தெரிவித் தமை அரசியல் தேர்தல் நோக் கம் கருதிய அறிக்கையாகும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. அண்மையில், பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழக தலைவர் இல. கணேசனே இந்த கருத்தை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

இந்த நிலையில் அவர் கூறிய கருத்து. அந்தக் காலகட்டத்தில் தமிழகத்தில் பாகிஸ்தானிய உளவாளியாக செயற்படும் இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டமையைக் கொண்டு இந்திய தரப்பால் உறுதி செய்யப்படும் வகையில் அமைந்து விட்டது. எனினும் அவ்வாறான செயற்பாடுகள் எவையும் இலங்கையில் நடைபெறவில்லை. நடைபெறவும் அனுமதிக்கப்படமாட்டாது என்று இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## நபர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை

(கொழும்பு)
நெலுவ, இடிகெகுணஹென பிரதேசத்தில் நபர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நெலுவ பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட தேடுதலின்போது சடலம் மீட்கப்பட்டுள்ளது. சிங்கொட, நவரியன்த பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் மீதான பிரே பரிசோதனை மற்றும் மரண விசாரணை இன்று இடம்பெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் என்பதன் சொற்பொருள் விளக்கம்

அரசியல் என்னும் சொல்லை இன்று நாம் Politics எனும் ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லாக வழங்கிவருகின்றோம்.
அரசு பற்றிய கல்வியே அரசியல், அரசு, ஆட்சி, மக்கள் நாடு ஆகியவையெல்லாம் அரசியலுக்குரியன. திருக்குறலிலுள்ள அரசியலுக்கு அரசனது இயல்புகள் என்று பொருள் கூறுகிறது பரிமேலழகர் உரை. எனவே அரசனது பண்புகளைக் கூறுவதே அரசியல் எனலாம்.

**தலைப்பு வரையரை:**
தொலைநோக்குப் பார்வையுடன் தொட்டுக் காட்டிய வள்ளுவரின் அன்றைய அரசியல் கூறுகள் இன்றைய அரசியலோடு பொருத்திப் பார்க்கும் பாங்கினையே திருக்குறலில் அரசியல் எனும் தலைப்பு வரையறுத்துக் கூறுகிறது. திருக்குறள் முடியாட்சி காலத்தில் தோன்றியது என்றாலும் அவற்றிலே கூறப்பட்டுள்ள அரசனின் தன்மைகள், அரசாள்வோரின் பணிகள் முதலியவை இன்றைய குடியாட்சி அரசியலின் உட்பிரிவகளோடு தொடர்புடையனவாக உள்ளதாலும் இதனை ஆய்வோடு பார்ப்பதாலும் இத்தலைப்பு இவ்வாறு அமைந்தது எனலாம்.

**எது அரசு? யார் அரசர்?**
குடும்பம், குடி, சமயம், பிற பிற மன்றங்கள் ஆகியவை பரந்த அமைப்பே சமூகம் சமூகத்திலுள்ள குடும்பம், சமயம், போன்றதே அரசு என்னும் அமைப்ப ஆகும். ஆக அரசு என்பது சட்டம் இயற்றி அதனை நடைமுறைப்படுத்திக் காண்பித்து வரும் ஓரமைப்பு.

அரசு பெற்ற உருவகம் ஆட்சி எனலாம். அரசே தன்னிடம் இயல்பாக அமைந்த அதிகாரத்தை ஆட்சி எனப்படும் ஆளுங்கணத்திற்குத் தந்து செயல்படுகிறது. இவ்வாளுங்கணத்தின் தலைமையே அரசன். இது முடியாட்சியின் நிலை. இன்றைய குடியாட்சி நிலையில் இது குடியரசுத் தலைவர் அமைச்சர் என அமையும்.

இப்படிப்பட்ட அரசனின் அரசியலில் மக்கள், நிலப்பரப்பு, ஆட்சி, இறைமை என்ற நான்கு கூறுகள் அடிப்படையென இன்றைய அரசியல் அறிஞர்கள் வகுத்துரைக்கின்றனர். இவ்வாறே வள்ளுவரின் தொலைநோக்கு இங்குப் பொருந்துவது புலப்படும்.

அரசனுக்குரிய பண்புகளும் பணிகளும்
1, அரசாளக்கூடிய தன்மையைப் பெற்றவன் எவர்க்கும் அஞ்சாத திண்மையைப் பெற்றிருக்க வேண்டும்.

2. வறியவர்களுக்கு ஈயும் பண்புடையவனாக இருத்தல் வேண்டும்.

3. சோம்பலைப் பகையாகக் கொண்டு, முயற்சியை (ஊக்கம்) நட்பாகக் கொள்ளுபவனாக இருத்தல் தேவையானது.

4. கல்வி கேள்விகளில் தேர்ந்த நுண்ணறிவு பெற்றவனாகவும் ஒரு பொருளை நன்கு ஆராய்ந்து துணிந்து கருத்துக்களை எடுத்துரைப்பவனாக இருத்தல் வேண்டும்.

5. குடிமக்களுடைய குறைகளைக் கேட்டு அதனை உடனடியாக நீக்கும் தன்மையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

குடிமக்கள் பார்த்து அஞ்சத்தக்க தோற்றத்தினைப் பெற்றிருக்கக் கூடாது. மாறாகக் காட்சிக்கு எளியனாகவும் இன்சொல் கூறுபவனாகவும் இருத்தல் மிகவும் தேவையானது.

7. குடிமக்களே இவன் மனம் புண்படும்படி கடுமையான சொற்களால் கூறினாலும் அவற்றைப் பொறுமையுடன் செவிமடுத்து அவற்றுள் நன்மை தீமைகளை ஆராய்ந்து ஆராய்ச்சியை நடத்துபவனாகவும் இருத்தல் மிகவும் இன்றியமையாத தன்மைகளாக மதிக்கப்படும்.

அரசனிடம் இப்படி இயல்பாகவே தூங்காமை, துணிவுடைமை,மானமுடைமை, செவிகைப்பச் சொற்பொறுத்தல், அளியுடைமை முதலான பண்புகள் நிறைந்திருக்க வேண்டுமென்று வள்ளுவர் எதிர்பார்ப்பது இன்றைய அரசியலுக்கும் எதிர்கால அரசியலுக்கும் பொருந்தும் என்பதைச் சொல்லாமல் சொல்லி இருப்பது உணர முடிகிறது.

இத்தகைய அரசனின் இயல்புகளைக் கம்பரும் மந்தரை சூழ்ச்சிப்படலத்தில்

இனிய சொல்லினன் ஈகையன் எண்ணினன்,
வினையன் தூயன் விழுமியன் வென்றியன்
நினையும் நீதிநெறி கட வான் எனில்
அனைய மன்னற்கு அழிவும் உண்டாம் கொலோ?

**அரசனின் பணிகளாவன:**
இன்றைய அரசியல் அறிஞர்கள் அரசனுக் குரிய பணிகள் என்னென்ன என்பதை நான்கு வகையில் அதாவது காவற்பணி, போர்ப்பணி, ஆட்சிப்பணி, வருவாய்ப்பணி என வகுத் துரைப்பர். வள்ளுவர் கண்ட அறிவியலில் இத்தகைய பணிகள் காத்தல், வினை, தெரிநிது வினையாடல், இயற்றல், ஈட்டல், குடிஓம்பல் முதலானவையாக கூறப்பட் டுள்ளன.

**காவற்பணி:**
வெளிநாடுகளிலிருந்து அண்டை அயல் நாடுகளில் இருந்தும் பகை நாடுகளில் இருந்தும் தோன்றிவரும் தாக்குதல் களிலிருந்து அரசன் தன் அரசையும் மக்களையம் காத்தல் இவ்வகையில் அடங்கும் இதனை வள்ளுவர்.

இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்... (குறள் 547)

செருவந்த போழ்தின் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து விடும்... (குறள் 569)
என்ற குறள்களிலே கூறுவதை காண முடிகிறது.

நாடுகளுக்கு வெளியேயிருந்து வரும் புறப்பகையிலிருந்து காப்பதோடு மட்டுமல்லாமல் உள்நாட்டிலே நிகழும் உட்பகையி லிருந்தும் நாட்டு மக்களைக் காத்தல் அரசனின் பணியென்பதை

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும்இல்லது நாடு... (குறள் 735)

இக்குறள் உணர்த்துகிறது. மேலும் இத்தகைய உட்பகையைத் தோன்றும் இடத்திலே தோன்றும்போது களைந்தெறிய வேண்டுமெனறும் கட்டளையிடுகின்றார்.

இன்றைய அரசாட்சியில் இத்தகைய புறப்பகையை எதிர்க்கப் படைகளும் உட்பகையைப் போக்க காவல் படைகளும் உள்ளமை அன்றைய குறளில் உணர்த்தும் அரசியலோடு இங்கு பொருத்திப் பார்க்கத்தக்கதாகும்.

**போர்ப்பணி:**
பகைவரிடமிருந்து தன் நாட்டையும் மக்களையும் காக்கும் பொருட்ட அரசன் பகைநாட்டின் மீது போர் செய்ய வேணிடி வரும். அத்தகைய சூழ்நிலையில் அரசன் செய்ய வேண்டிய பணிகளை வள்ளவர் தெரிந்து செய்வதை வலிஅறிதல் இடனறிதல் முதலான அதிகாரங்களில் பட்டியலிடுகிறார்.

தெரிநிது செய்தல்:
போர்ச் செயலைச் செய்வதற்கு முன்பு அச்செயல் பற்றி ஆராய்ந்து எண்ணிப் பார்க்கவேண்டுமென்பதையும் திருக்குறள் உணர்த்துகிறது.

இடனிறிதல்:
போரிடுவதற்கு ஏற்ற இடம் தெரிவ செய்வதனாலும் அரசன் விழிப்புடன் செயல்பட வேண்டும்.

**அமைச்சர்:**
அரசாட்சியில் அரசனுக்கு அடுத்துப் பதவி வகிப்பவர் அமைச்சர் ஆவார். அமைச்சர் மக்களுக்கும் அரசனுக்கும் நெருங்கிய தொடர்புடையவர். இவர் அரசரின் குறிப்பறிந்து நடக்கத் தெரிந்தவராகவும் அரசியல் அறங்களை அறிந்து கல்வி நிறைநது இடங்கிய சொல்லை யுடையவராகவும் இருத்தல் வேண்டும். என்பதை வள்ளுவர் அமைச்சியல் என்னும் பத்து அதிகாரங்கள் வழி உணர்த்தகிறார்.

**தூதுவர்:**
இன்றைய அரசியலில் தூதுவருக்கு பங்கு குறிப்பிடத்தக்கது. அண்டை நாட்டுடனான தொடர்பை வலுப்படுத்துதலும் நட்புறவை பேணிக் காப்பதுமாகிய பணிகள் அவர்களின் கையில் உள்ளன. அண்டை நாட்டோடு தொடர்பு கொள்ளும்படி சொல்ல வருபவற்றைச் சுருக்கமாக கடுஞ்சொற் களைத் தவிர்த்து கேட்பவர் மகிழும்படி சொல்லி உடன்பாடு செய்ய வல்லவனே சிறந்த தூதுவன் ஆவான் என்று வள்ளுவர் தூதுவருக்கு இலக்கணம் வகுக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிவரவு குடியகல்வு பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள விசேட தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)
இலங்கையின் குடிவரவு குடியகல்வு பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள விசேட தொல்லபேசி இலக்கம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் இந்த விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

1962 என்ற இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்வதன் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் துணைக் கட்டுப்பாட்டாளர் ஜயவீர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. வார நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 4.45 மணி வரையில் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கும் நோக்கில் இவ்வாறு தொலைபேசி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கட்டுப்பாட்டாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கு எதிரான இலங்கையின் முனைப்புக்கள் வரவேற்கப்பட வேண்டும்

(கொழும்பு)
சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கு எதிரான இலங்கையின் முனைப்புக்கள் வரவேற்கப்பட வேண்டிது என அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது. சட்டவிரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுக்க இலங்கை வழங்கி வரும் ஒத்துழைப்பு வரவேற்கப்பட வேண்டியது என அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் டேவிட்ஜொன்ஸ்டன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்துள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் வலுப்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யுத்தத்தின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து அமைச்சர் பீரிஸ், அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சருக்கு விளக்கியுள்ளார். சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களின் படகுப் பயணங்களை தடுக்கும் நோக்கில் அண்மையில் அவுஸ்திரேலியா படகுகளை வழங்கியிருந்தது, இதற்காக நன்றி பாரட்டுவதாகத் தெரிவித்துள்ளார்.

# நிலையற்ற கொள்கையுடைய அரசாங்கம் எவ்வாறு நிலையான சமாதானத்தை ஏற்படுத்தமுடியும்

## ஆங்கில ஊடகம்

(கொழும்பு)
நிலையான கொள்கை அற்ற அரசாங்கம் ஒன்றினால் நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆங்கில ஊடகம் ஒன்று இதனைத் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் எந்த விடயத்திலும் நிலையான கொள்கையை கடைப்பிடிப்பதில்லை. ஒரு விடயத்தில் ஒவ்வொரு நாட்டுக்காகவும், ஒவ்வொரு வகையிலான [illegible]ல்களை வெளியிட்டு வருகிறது. அதேபோன்று தெற்கில் ஒன்றாகவும், வடக்கில் வேறு மாதிரியும் ஆட்சி நடத்தி வருகிறது. அதிகாரத்தில் உள்ள மகிந்தவின் குடும்பம் தம்முடன் நெருங்கியவர்களுக்கு ஒருவகையான ஆட்சியையும், ஏனையவர் களுக்கு வேறு வகையான ஆட்சியையும் வழங்கி வருகிறது.

இவ்வாறு நிலையில்லா தன்மை கொண்ட அரசாங்கத்தினால் இலங்கையில் எந்த தருணத்திலும் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்று அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

# கொழும்பில் போராட்டத்திற்கு நீதிமன்றம் தடை

(கொழும்பு)
கொழும்பில் போராட்டங்களை நடாத்தக் கூடாது என நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இன்றைய தினம் கொழும்பின் கொம்பனித்தெரு பகுதியில் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களை நடாத்தக் கூடாது என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கொம்பனித்தெரு காவல் நிலையப் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கோட்டை மாஜிஸ்திரேட் நீதவானினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. காவல் துறையினர் நீதிமன்றில் விடுத்த கோரிக்கைக்கு அமைய இவ்வாறு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்களை நடாத்த வேண்டுமாயின் நீதிமன்றம் அதற்காக சில வழிமுறைகளை அறிவித்துள்ளதாக காவல்துறையினர் தெரிவிக்கின்றனர். 15ம் உலக இளைஞர் மாநாடு நேற்றைய தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சர்வதேச ரீதியிலான நிகழ்வு ஒன்று இலங்கையில் நடைபெறும் தருணத்தில் தலைநகர் கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்கள் நடத்தப் படுவது நாட்டின் நன்மதிப்பை பாதிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே இன்றைய தினம் போராட்டங்களை நடாத்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், சுகாதார சேவை மாணவர் அமைப்புக்கள் உள்ளிட்ட இன்றைய தினம் கொழும்பில் போராட்டங்களை நடாத்தத் திட்டமிட்டிருந்தன. எனினும், நீதிமன்றம் இந்த போராட்டங்களை நடாத்தக் கூடாது என அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாடு நடைபெற்ற காலப்பகுதியிலும், கொழும்பு, கண்டி, ஹம்பாந்தோட்டை உள்ளிட்ட சில பகுதிகளில் ஆர்ப்பாட்டங்க்ள் போராட்டங்களை நடாத்த நீதிமன்றம் தடை விதித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, போராட்டம் ஒன்றினால் காலி வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. ரத்மலானை தெலவல வீதி நீண்ட காலமாக செப்பணிடப்படவில்லை எனத் தெரிவித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் காலி வீதியில் பாரியளவில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

# கருத்தரித்திருப்பது தெரியாமலேயே ஆண் குழந்தையொன்றை பெற்றெடுத்த தாய்

(காலி)
கருத்தரித்திருப்பது பற்றி தெரியாமலேயே காலி, உடுகம பிரதேசத்தில் தாய் ஒருவர் ஆண் குழந்தையொன்றை பெற்றெடுத்துள்ளார். கடுமையான வயிற்று வலி காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குறித்த பெண், ஆரோக்கியமான குழந்தை ஒன்றை பெற்றெடுத்துள்ளார்.

கருத்தரித்திருப்பது அல்லது வயிற்றில் குழந்தை இருப்பது பற்றி கணவன் மனைவி இருவரும் அறிந்திருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

36 வயதான குறித்த பெண்ணின் ஆறாவது குழந்தை இதுவென்பது குறிப்பிடத்தக்கது. கருத்தரித்திருப்பது பற்றி தெரியாது கணவனும் மனைவியும் கடின உழைப்பில் ஈடுபட்டிருந்ததாகவும், வயிற்றில் கட்டி இருப்பதாக கருதியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வயிற்றில் ஏற்பட்டுள்ள கட்டி தொடர்பில் சிகிச்சை பெற்றுக் கொள்ள காலி வைத்தியசாலைக்கு செல்லவிருப்பதாக பெண், உறவினர்களிடம் தெரிவித்துள்ளார்.

எனினும், திடீரென ஏற்பட்ட கடுமையான வயிற்று வலி காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குறித்த பெண் 2600 கிராம் எடையுடைய ஆரோக்கியமான ஆண் குழந்தை ஒன்றை பெற்றெடுத்துள்ளார்.

தாயும் சேயும் நலமாக இருக்கின்றனர் என வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வீரவன் சவின் எச்சரிக்கையை ஆளும் கடசியினரே உதாசீனம் செய்கின்றனர்



(கொழும்பு)
வீடமைப்பு அமைச்சரும், ஜே.என்.பி.யின் தலைவருமான விமல் வீருவன் சவின் எச்சரிக்கையை ஆளும் கட்சியினரே எள்ளி நகையாடியுள்ளனர். அமைச்சர் விமல் வீரவன்ச அண்மையில் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்திருந்தார். தமது கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாவிட்டால் ஆளும் கட்சியிலிருந்து விலகிக் கொள்ள நேரிடும் என கட்சியின் இரண்டாவது பொதுச் சபைக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

கூச்சல் இடுவதனால் அரசாங்கத்தை அச்சுறுத்த முடியாது என்பதனை விமல் வீரவன்ச புரிந்து கொள்ள வேண்டுமென வனவள அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார். இவ்வாறான அறைகூவல்களின் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அசைக்கக் கூட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதே வேளை, பிரபல்யம் அடைவதற்காக விமல் வீரவன்ச இவ்வாறு பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருவதாக கடுவெல நகர மேயர் புத்ததாச தெரிவித்துள்ளார். விமல் வீரவன்ச யார் என்பதனை மக்கள் அறிவார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். விமல் வீரவன்ச ஆளும் கட்சியிலிருந்து வெளியேறினால் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படப்போவதில்லை என புத்ததாச தெரிவித்துள்ளார்.

# யாழ். பல்கலையினுள் மாணவர்களை அச்சுறுத்தும் துண்டுப்பிரசுரங்கள்




(யாழ்ப்பாணம்)
மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க துணைபுரிவோர் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்று யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் அனாமதேய துண்டுப்பிரசுங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

அந்த சுவரொட்டிகளில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்குவதை அனுமதிக்க முடியாது என்று வலியுறுத்தப்பட்டிருந்ததுடன், அதற்குத் துணை செய்யும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மாணவ ஒன்றிய தலைவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையிலான வசனங்களும் இடம் பெற்றுள்ளன.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் மாணவர்கள் விரிவுரைகளுக்கு சென்ற போது நேற்று முன்தினம் காலை இவ் எச்சரிக்கை துண்டுபிரசுரங்களை காண நேர்ந்துள்ளது. இத்துண்டு பிரசுரங்கள் அதற்கு முந்தைய இரவில் ஒட்டப்பட்டு இருக்க வேண்டும் எனவும் இது யாழில் எவ்வாறு பல்கலைக்கழக வளாகத்தினுள் ஒட்டப்பட்டது என்பது தொடர்பில் மாணவர்கள் மத்தியில் அச்சமும் குழப்பமும் ஏற்பட்டுள்ளது. குறித்த துண்டுப்பிரசுரத்தில் கீழ்க் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள் ஆகின்ற நிலையில் மீண்டும் பயங்கரவாதம் இந் நாட்டில் தலை தூக்க அனுமதிக்க முடியாது: அழிக்கப்பட்ட புலிகளால் நாமும் இந்த தேசமும் எத்தனையோ கொடூரங்களை சந்தித்தோம் என்று இந்த உலகமே நன்றாக அறியும். இந் நிலையில் பல்கலைக்கழகத்தில் மீண்டும் புலிகளை புதுப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிய முடிகிறது.

அவ்வாறான செயற்பாடுகளை தூண்டும் பேராசிரியர்கள் மாணவர் ஒன்றியத் தலைவர்களை நாம் நீண்ட காலமாக அவதானித்து வந்ததுடன், அவர்களுக்கு நேரடியாக எச்சரிக்கையும் செய்தோம். ஆனால் அது பலனளிக்கவில்லை என்றுதான் கூற வேண்டும். ஏனெனில் அவர்களின் நடவடிக்கைகள் அதிகரித்து தான் செல்கின்றது.

பேராசிரியர்களின் வழிநடத்தலின் கீழ் தான் மாணவர் ஒன்றியங்கள் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு துணை போவதாக நாங்கள் அறிகின்றோம். அவர்களுக்கு நாங்கள் இறுதியான ஒரு எச்சரிக்கை விடுகிறோம் என அந்த துண்டு பிரசுரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LI
JAFFN

# சீனாவில் மனித உரிமை சட்டத்தரணி கைது



(கொழும்பு)
ஜனங்களின் உணர்ச்சியை அரசிற்கும், சட்டத்திற்கும் எதிராகத் தூண்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டு, சீனாவில் மனித வுரிமை சட்டதரணியான புஷி கியாங் என்பவர் கைது செய்யப்பட்டு விசாரிக் கப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது. கடந்த காலங்களில் இவர் ஐ.வை.வல உட்படப் பல மனித உரிமை ஆர்வலர் களின் சட்டதரணியாவார் என்பது குறிப் பிடப்பட்டுள்ளது.

June 1989 களில் சீனாவில் இடம் பெற்ற மக்கள் எழுச்சியை, சீன ராணுவம் கவச வாகனங்கள் சகிதம் அடக்கிய போது, 2600 பேர் மட்டில் காவு கொள்ளப்பட்ட தினத்தை நினைவு கூறும் வேலைத் திட் டங்களை ஒழுங்கு செய்யக் குழுமியிருந் த ஒரு சில மனித உரிமை ஆர்வலர் களும் கைது செய்யப்பட்டமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட வர்களில் அன்றைய தினம் இறந்த ஒருவரின் தாயாரும், விழா அமைப்புப் பற்றிய ஆய் வாளரும், பல மனிதவுரிமை ஆர்வலர் களும் அடங்குவர்.

1989 இல் இடம் பெற்ற படுகொலையின் வருடாந்த தினம் நெருங்கி வரும் நிலை யில், சீன அரசு தொடர்ந்து எதிராளிகளை அரச அடக்கு முறைக்கு உட்படுத்தி வருவதாக சர்வதேச மனித உரிமை அலுவலகம் தெரிவித்துள்ளது. புனித சுதந்திர இடமெனப் பொருள்படும் ரியான் அன்மென் சதுர்க்கத்தில், ஜூன் மாதம் நாலாம் திகதி 1989 இல், மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட மக்கள் எழுச்சியை, நசுக்கச் சீன ராணுவம் கவச வாகனங்கள் கொண்டு தாக்கியமையும், 2600 மாணவர்களும், பொது மக்களும் இறந்த மையும், 7000 பேர் மட்டில் காயமுற்ற மையும், சர்வதேச மனித உரிமை அமைப் புகளால் நினைவுகூறப்பட்டுள்ளது.

அன்றைய காலங்களில் ரஷ்யாவிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் இடம் பெற்று வந்த அரசியற் புனரமைப்பாலும், மனித உரிமைச் சட்ட சீர்திருத்தத்தாலும் உணர் வூட்டப்பட்ட மாணவர்களால், சீனாவிலும் அந்நிலை தோன்றவென ஒழுங்கு செய்யப்பட்ட மக்கள் எழுச்சி அதுவாகு மென்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. திரளான மக்களின் நியாய மான, உணர்ச்சி பூர்வமான எழுச்சியை, அரச அடக்குமுறைகள் தோற்கடிக்க முடி யாதென சமூக ஆர்வலர்கள் கருதுவது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தான் ஜனாதிபதித் தேர்தலில் இருமடங்கு வாக்குகள் பதிவாகியுள்ளன

(அப்கானிஸ்தான்)
அப்கானிஸ்தானில் இடம் பெற்ற கடந் த ஜனாதிபதித் தேர்தலில் பதிவான வாக்குகள், 2009 களில் பதிவானதை விட இருமடங்கெனக் குறிப்பிடப்பட் டுள்ளது. இம்முறை அதிகமான பெண் கள் வாக்களித்ததாகத் தெரியவந் துள்ளது. மேற்குத் தேசங்களிற் காணப்படும் மனிதவுரிமையை அண் மித்த நவீன அப்கானிஸ்தான் மலர்ச்சி யைத் தோற்றுவிக்கும் முகமாக, அதிகமான பெண்கள் வாக்களித் ததாகக் குறிப்பிடப்படுள்ளது.

தேர்தலில் எவரும் வெற்றி பெறுவதற் கான பெரும்பான்மை வாக்குகளைப் பெறாத காரணத்தால், அதிகப்படி யான சமமான வாக்குகளைப் பெற்ற இரு வேட்பாளர்களுக்கும் இடையே, ஜூன் மாதம் ஏழாம் திகதி வெற்றியாள ரைத் தீர்மானிக்கும் முகமாக இரண் டாம் தேர்தல் இடம்பெறவுள்ளது.

இத் தேர்தலில் முன்னைய வெளி விவகாரச் செயலர் அப்துல்லா உலக வங்கிப் பணிப் பாளராகக் கடமை யாற்றிய அஷ்ரவ்(க) க(ா)னியும் போட்டியிடவுள்ளனர். இரு முன்னணி வேட்பாளர்களும் மிகவும் திறமை சாலிகள் என்பது சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இருந்தும் ஆச்சரியம் கலந்த ஏமாற்றத்தை அவ்(க)கான் மக்களுக் குத் தரும் வகையில், இரு ஜனாதிபதி வேட்பாளர்களும் தனித்தனிக் கூட்டு அரசாங்க அமைப்பைப் பிரகடனம் செய்துள்ளதாக அறிய வருகிறது. முன்னைய ராணுவ அதிகாரிகளைப் பிரதி ஜனாதிபதியாகவும், நீதி மன்றத் தால் குற்றவாளிகளாகக் காணப்பட வேண்டியவர்களை மந்திரிகளாகவும் அறிவித்திருப்பது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அவ்(க)கானின் ஜனாதிபதி புதிய வராக இருப்பினும், நேற்றைய அரசின் செல்வாக்கு நாளை வரும் அரச அமைப்பிலும் மிகையாகச் செலுத்தப் படும் எனும் உண்மை, மக்களுக்குத் தெளிவாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.

காபூல், கந்தகார் போன்ற கலாசாலை களில் மிகவும் தேர்ச்சி பெற்ற புதிய தலை முறையினர் பலர் இருக்கை யில், அவர்கள் அரசியலில் ஆட்சிப் பலத்தை அடைய முடியாதிருப்பது கடும் கவலை கலந்த ஏமாற்றத்தை அளிப்பதாகக் கருத்துக் கணிப்பு ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

புதிய யுகத்தை எதிர்பார்த்துப் போரின் மத்தியிலும் துணிந்து வாக்களித்த பெண்களின் கனவு, முக்காடுகளுக் குள் முடங்கிப்போயிற்றெனவும், முஸ்லீம் மதத் தீவிரவாதிகளின் ஆட்சியில் பெண்கள் தொடர்ந்து பல உரிமை களையும் இழந்து வாழ வேண்டிய நிலை காணப்படுவதாகவும் மனிதவுரிமை ஆர்வலர் கருதுவது குறிப்பிடத்தக்கது.

# ரயில் குண்டுவெடிப்பில் கமெராவில் பதிவான நபரை பற்றிய மர்மம் விலகியது

(சென்னை)
சென்னை சென்ட்ரல் ரயில் நிலைய கண்காணிப்பு கமெராவில் பதிவான மர்ம நபர் கேரளாவைச் சேர்ந்தவர் என்று தெரிய வந்துள்ளது. சென்னை சென்ட்ர லில் கடந்த 1ம் திகதி கவுகாத்தி எக்ஸ் பிரஸ் ரயிலில் 2 குண்டுகள் வெடித்த சம்பவம் தொடர்பாக சி.பி.சி.ஐ.டி. பொலிசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

தீவிரவாதிகளை பிடிப்பதற்காக சென்ட்ரல் ரயில் நிலைய கண்காணிப்பு கேமராக் களை ஆய்வு செய்தபோது குண்டு வெடிப்பதற்கு 7 நிமிடங்களுக்கு முன்னர் வழுக்கை தலை ஆசாமி ஒருவர் வேகமாக ரயில் நிலையத்தை விட்டு வெளியேறும் காட்சி ஒன்றும் பதிவாகி இருந்தது. இவர் மீது சந்தேகம் இருப்ப தாக ஐ.ஜி.மகேஸ்குமார் அகர்வால் கூறினார். இதனால் அவர்தான் குண்டு வைத்த தீவிரவாதியாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது. இந்நிலையில், இந்த ஆசாமி யார் என்பதை கண்டு பிடிக்கும் முயற்சியில் தீவிரம் காட்டிய பொலி சாருக்கு, இப்போது அவரைப் பற்றிய மர்மம் விலகியது. சந்தேக நபர் கேரளாவை சேர்ந்தவர் என்பதும் கோடை சுற்றுலாவுக்காக இலங்கைக்கு அவர் செல்வதும் தெரிய வந்துள்ளது.

சென்னையில் இருந்து விமானத்தில் செல்ல திட்டமிட்டிருந்த அவர் ரயில் ஒரு மணி நேரம் தாமதமாக வந்ததால், விமானத்தை பிடிப்பதற்காக அவசரமாக ஓடியதும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இது தொடர்பாக சி.பி. சி.ஐ.டி. ஐ.ஜி. மகேஸ்குமார் அகர்வால் கூறுகையில், கமெராவில் சிக்கிய சந்தேக நபர் யார் என்பதை உறுதி செய்துவிட்டோம்.

கேரளாவை சேர்ந்த அவரது பெயர் உள்ளிட்ட மற்ற விவரங்களை வெளியிட விரும்பவில்லை என்றும் குண்டு வெடிப்பு சம்பவத்துக்கும் அவருக்கும் எந்த வித மான தொடர்பும் இல்லை எனவும் தெரிவித்தார்.

# திருமணமான ஆணுடன் விதவை பெண் கள்ள உறவு மக்கள் முன் 9 முறை பிரம்படி

(லாங்சா)
8 பேர் கொண்ட கும்பல் ஒரு வீட்டுக்குள் நுழைந்தது. அப் போது அவ்வீட்டுக்குள் திருமணமான ஆண் ஒருவரும், விதவை பெண் ஒருவரும் கள்ள உறவில் ஈடுபட்டதை அவர்கள் கண்டனர்.

அக் கும்பலை சேர்ந்தவர்கள் உடனே அந்த ஆண் மகனை கட்டிப்போட்டு தாக்கியதுடன் அவன் கண் முன்னாலேயே அப் பெண்ணை அவர்கள் 8 பேரும் ஒவ்வொருவராக கற்பழித்துள்ளனர்.

பின்னர் அவர்களே அப்பெண்ணை காவல் நிலையத் திற்கு இழுத்து சென்று போலீசாரிடம் ஒப்படைத்துள் ளனர். அப்பெண்ணிடம் விசாரணை நடத்திய பொலிசார் கற்பழிக்கும்



கும்பலை சேர்ந்த 3 பேரை கைது செய்தனர்.

மேலும் திருமணமான ஆணுடன் உறவு வைத்துக்கொண்டுள்ளதால் ஷரியத் சட்டப்படி அப்பெண்ணுக்கும், அவளது காதலனுக்கும், பொது மக்கள் முன்னிலையில் 9 பிரம்படி கொடுக்கப்பட்டது.

# இங்கிலாந்தில் வளர்ப்பு நாய்க்கு விமான ஊழியருக்கான அட்டை

(லண்டன்)
இங்கிலாந்தில் அதிக தூரம் பயணம் செய்த வளர்ப்பு நாயை கவுரவிக்க அதற்கு விமான ஊழியருக்கான அட்டை வழங்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் பெட் போர்ட் ஷிரில் உள்ள லெய்க்டன் புஷார்ட் என்ற இடத்தை சேர்ந்தவர் கிரஹாம் மவுண்ட் போர்டு. இவர் காஸ்லி என்ற பெண் நாயை செல்லமாக வளர்த்து வருகிறார். அந்த நாளை அது பிறந்த 12வது வாரத்தில் இருந்து விமான பயணத்தின் போது தன்னுடன் அழைத்துச் செல்கிறார். தற்போது அந்த நாய்க்கு 3 வயது ஆகிறது. கிரஹாமுடன் அந்த நாய் இதுவரை 250 மணி நேரம் விமானத்தில் பறந்துள்ளது. அதுவரை மொத்தம் 80,467 கி.மீட்டர் தூரம் பயணம் செய்துள்ளது.

எனவே அதை கவுரவிக்கும் வகையில் அந்த நாய்க்கு விமான ஊழியருக்கான அட்டை வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அது விமான ஊழியர்கள் செல்லும் நுழைவு வாயில் மூலம் விமான நிலையங்களுக்குள் செல்ல முடியும்.

இங்கிலாந்திலேயே இந்த ஒரு வளர்ப்பு நாய்க்கு தான் இக்கவுரவம் வழங்கப் பட்டுள்ளது. அதற்கான அங்கீகாரத்தை விமான ஊழியர்கள் மற்றும் விமானிகள் சங்கம் வழங்கியுள்ளது.

# கற்பழிப்பு குற்றத்தில் சிக்கிய 848 பாதிரியார்கள் பதவி நீக்கம்




(ஜெனீவா)
ஐ.நா. சபைக் கூட்டம் ஜெனீவாவில் நடந்தது. அப்போது சர்வதேச நாடு களில் மக்களுக்கு எதிரான குற்றங் கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும் குற்றச் செயல்களில் ஈடுபட்ட வர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை கள் குறித்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. வத்திகான் நகரின் சார்பில் அதன் ஐ.நா. தூதர் ஆர்ச்பிஷப் சில்வா னோ தொமாசி கலந்து கொண்டார். அப்போது, கற்பழிப்பு மற்றும் குழந் தைகளிடம் பாலியல் தொல்லை கொடுத்த பாதிரியார்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை சமர்பித்தார்.

அதில், கடந்த 10 ஆண்டுகளில் கற்பழிப்பு குற்றங்களில் ஈடுபட்ட 848 பாதிரியார்கள் பதவி நீக்கம் செய்யப் பட்டுள்ளனர். மேலும் 2572 பேருக்கு சிறிய அளவிலான தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன என கூறப்பட் டிருந்தது.

அந்த அறிக்கையில் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து வருடம் வாரியாக குறிப்பிடப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூடியூபிற்கு பச்சைக்கொடி காட்டிய பாகிஸ்தான்

பாகிஸ்தானில் காணொளி வலைத்தளமான யூடியூபிற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கும் தீர்மானத்திற்கு அந்நாட்டு பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. இஸ்லாம் மதத்தை அவமதிக்கும் காணொளிகளை யூடியூப் இணையதளம் வெளியிட்டதாக பாகிஸ்தானில் கடந்த 2008ம் ஆண்டு பிப்ரவரி 22ம் திகதி அந்த வலைத்தளத்திற்கு தடை விதிக்கப்பட்டது.

இதனையடுத்து நான்கு ஆண்டுகளுக்கு பின்னர் அந்த சர்ச்சைக்குரிய காணொளிகள் நீக்கப்பட்டது. எனினும் கடந்த 2010ம் ஆண்டு இஸ்லாமியர்களை இழிவுப்படுத்தும் வகையில் அதே போன்ற காணொளிகள் வெளியாகியிருந்ததாக கூறப்படுகிறது.

மேலும் அவர்களை அவமதிக்கும் நோக்கில் இன்னசென்ஸ் ஆஃப் முஸ்லிம்ஸ்" என்ற திரைப்படத்தின் டிரைலரை யூடியூப் இணையதளம் நீக்காமல் இருந்ததாக கூறி பாகிஸ்தான் தொலைத்தொடர்பு நிறுவனம் யூடியூபை "பிளாக்" செய்தது.

இதனைதொடர்ந்து துருக்கி, ஈரான், சூடான் மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய இஸ்லாமிய நாடுகளிலும் யூடியூப் இணையதளம் தடை செய்யப்பட்டது.

இந்நிலையில் பாகிஸ்தான் மக்கள் கட்சியை சேர்ந்த எம்.பி சாசியா மாரி யூடியூப் தடையை நீக்குவதற்கான தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். இதன் பேரில் நாடாளுமன்ற கீழ்சபை உறுப்பினர்களின் ஒருமித்த ஆதரவுடன் அந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக "டான் ஆன்லைன்" செய்தி வெளியிட்டுள்ளது.

# கூகுளின் Same Day Delivery சேவை விஸ்தரிப்பு



கூகுள் நிறுவனம் தனது பொருட்களை கொள்வனவு செய்பவர்களுக்கு அன்றைய தினமே குறித்த பொருட்களை கொண்டு சென்று சேர்க்கும் சேவையை வழங்கி வருகின்றது.

Same Day Delivery எனப்படும் இச்சேவை இதுவரையில் அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ், நியூ யோர்க் ஆகிய பகுதிகளில் மட்டும் காணப்பட்டது. ஆனால் தற்போது ஆயரொயவவயெ மற்றும் றுநளவ டுயு ஆகிய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

விசேடமான கூகுள் இணையத்தளத்திலிருந்து கொள்வனவு செய்யப்படும் பொருட்களே இவ்வாறு ளுயஅந னுயல னுநடiஎநசல சேவை மூலம கொண்டு சென்று சேர்க்கப்படுகின்றன.

# டுவிட்டரில் அமேசான் சொப்பிங் கார்ட்




அமேசான் பயனர்கள் தமது ஒன்லைன் சொப்பிங் சேவையினைப் பெற்றுக் கொள்ளும் போது டுவிட்டர் ஹேஸ் டேக் (hashtag) மூலமாக அமேசான் சொப்பிங் கார்ட்டினை பயன்படுத்த முடியும் என அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

AmazonCart எனும் இச்சேவையின் மூலம் அமேசான் பயனர்கள் தாம் கொள்வனவு செய்ய வேண்டிய புதிய பொருட்களை டுவிட்டர் தளத்திலிருந்தவாறே பட்டியலிட முடியும்.

இச்சேவையினை பயனர்களுக்கு விளக்கும் பொருட்டு வீடியோ தொகுப்பு ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. அதனை இங்கே காணலாம்.

# இதயத்தை காக்கும் காளான்




நகர்புறங்களில் உள்ள உணவகங்களில் இந்த காளான் உணவுகள் தாராளமாக கிடைக்கின்றன. காளான் இரத்தத்தில் கலந்துள்ள அதிகப்படியான கொழுப்பைக் கரைத்து இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் தன்மை கொண்டது. இதனால் உயர் இரத்த அழுத்தம் மற்றும் இரத்த நாளங்களின் உட்பரப்பில் உண்டாகும் கொழுப்பு அடைப்பைத் தடுக்கிறது. காளானில் உள்ள லெண்ட்டைசின் (lentysine) எரிட்டிடைனின் (eritadenin) என்ற வேதிப் பொருட்கள் இரத்தத்தில் கலந்துள்ள ட்ரை கிளிசஸ் ரைடு பாஸ்போலிட் போன்றவற்றை வெகுவாகக் குறைக்கிறது.

இதில் எரிட்டினைன் கொழுப்புப் பொருட்களை எந்தவித பாதிப்பும் இல்லாமல் இரத்தத்திலிருந்து வெளியேற்றி பிற திசுக்களுக்கு அனுப்பி உடலை சமன் செய்கிறது. இவ்வாறு உடலில் அதிகம் தேவையில்லாமல் சேரும் கொழுப்பு கட்டுப்படுகிறது. இதனால் இரத்தம் சுத்தமடைவதுடன் இதயம் பலப்பட்டு நன்கு சீராக செயல்படுகிறது. இதயத்தை பாதுகாப்பதில் காளானின் பங்கு அதிகம். பொதுவாக உயர் இரத்த அழுத்தம் ஏற்படும்போது உட்புறச் செல்களில் பொட்டாசியத்தின் அளவு குறையும். வெளிப்புறச் செல்களில் உள்ள சோடியம், உட்புறமுள்ள பொட்டாசியத்திற்கு சமமாக இருக்கும். இரத்த அழுத்தத்தின் போது வெளிப்புறத்தில் சோடியம் அதிகரிப்பதால் சமநிலை மாறி உற்புறத்தில் பொட்டாசியத்தின் அளவு குறைகிறது. இதனால் இதயத்தின் செயல்பாடு மாறிவிடுகிறது.

இத்தகைய நிலையைச் சரிசெய்ய பொட்டாசியம் சத்து தேவை. அவை உணவுப்பொருட்களின் மூலம் கிடைப்பது சாலச் சிறந்தது. அந்த வகையில் பொட்டாசியம் சத்து அதிகம் உள்ள உணவு காளான்தான். 100 கிராம் காளானில் பொட்டாசியம் சத்து 447 மி.கி. உள்ளது. சோடியம் 9 மி.கி உள்ளது. எனவே இதயத்தைக் காக்க சிறந்த உணவாக காளான் உள்ளது. மலட்டுத்தன்மை, பெண்களுக்கு உண்டாகும் கருப்பை நோய்கள் போன்றவற்றைக் குணப்படுத்துகிறது. தினமும் காளான் சூப் அருந்துவதால் பெண்களுக்கு உண்டாகும் மார்பகப் புற்று நோய் தடுக்கப்படுவதாக காளான் பற்றிய சமீபத்திய ஆராய்ச்சியில் கண்டுபிடித்துள்ளனர்.

# எப்போதும் இளமையாக இருக்க புதிய கண்டுபிடிப்பு



எப்போதும் இளைமையாக தோன்ற புதியவகை சிசிச்சை முறையை விஞ்ஞானிகள் கண்டறிந்து உள்ளனர். முதியவர்களுக்கு, இளைஞர்கள் அல்லது இளம் பெண்களின் இரத்தத்தை உடலில் செலுத்துவதன் மூலம் கடந்து போன இளமைப் பருவத்தை மீண்டும் பெற முடியும் என விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

தற்போது எலிகளிடம் மட்டும் இந்த சோதனையை செய்து பார்த்துள்ளனர். இளம் ரத்தத்தை செலுத்துவதன் மூலம், இயற்கையாகவே அந்த ரத்தத்தில் உள்ள வேதிப் பொருட்கள், நமது உடலைப் புதுப்பித்து சுறுசுறுப்பாக செயல்பட வைக்கும என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்

ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அமெரிக்க டாக்டர் டோனி விஸ் கோரே தலைமையிலான குழுவினர் இதுதொடர்பான ஆய்வை 18மாத எலியிடம் செய்து பார்த்துள்ளனர். அந்த எலிக்கு, 3 மாத எலியின் ரத்தத்தை திரும்பத் திரும்பச் செலுத்தி சோதனையிட்டுள்ளனர். இதற்கு வேம்பயர் தெரப்பி என்று பெயரும் சூட்டியுள்ளனர்.

இந்த ஆய்வின் முடிவில் இளம் ரத்தம் செலுத்தப்பட்ட வயதான எலிக்கு நினைவாற்றல் அதிகரித்ததாம். இளம் எலி போல சுறுசுறுப்பாகவும் அது செயல்பட்டதாம். மேலும் அந்த வயதான எலியின் மூளையில் பல்வேறு குறிப்பிடத்தக்க மாற்றங் களும் காணப்பட்டதாம் இதுகுறித்துக் வைத்தியர் டோனி கூறுகையில்,

எங்களது புள்ளிவிவரத்தின்படி இளம் ரத்தம் செலுத்தப்பட்ட வயதான எலி சுறுசுறுப்பாக இளம் எலி போல செயல்பட்டது. அதனிடம் இளமைத் துடிப்பும் காணப்பட்டது. இது தொடர்பான ஆய்வுகள் தொடர் கின்றன.

மனிதர்களிடம் அடுத்து இந்த சோதனையைச் செய்யவுள்ளோம். இந்த ஆய்வு வயோதிபம் காரணமாக ஏற்படும் பல பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வுகளைச் சொல்லும் என்று திடமாக நம்புகிறோம் என்று கூறினார். குறிப்பாக வயதானவர்களுக்கு வரும் அல்ஸீமர் நோய்க்கான தீர்வுகள் இதில் கிடைக்கும் என் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

# Huawei Ascend P7 ஸ்மார்ட் கைப்பேசியின் புகைப்படங்கள் வெளியாகின




Huawei நிறுவனத்தின் வடிவமைப்பில் விரைவில் அறிமுகமாகவுள்ள Ascend P7 ஸ்மார்ட் கைப்பேசியின் புகைப்படங்கள் இணையத்தளங்களில் வெளியாகியுள்ளன.

கூகுளின் Android 4.4.2 Kitkat இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள இக்கைப்பேசியானது 5 அங்குல அளவு, 1920 x 1080 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ளது.

இவை தவிர Quad-Core 1.8GHz Kirin 910T Processor , பிரதான நினைவகமாக 2GB RAM, 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினையும் 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா ஆகியவனவும் காணப்படு கின்றன.

# கர்ப்பிணி பெண்கள் பாஸ்தா சாப்பிடலாமா?

தானியங்கள் கொண்டு செய்யப்படும் இத்தாலிய உணவுகளில் ஒன்று தான் பாஸ்தா. தற்போது இந்த பாஸ்தா உலகம் முழுவதும் மிகவும் பிரபலமான உணவுகளில் ஒன்றாக உள்ளது. இதனை அனைத்து வயதினரும் விரும்பி சாப்பிடுவார்கள். அதிலும் பாஸ்தாக்களை மற்றும் தக்காளி சாஸ் சேர்த்த சமைத்து சாப்பிட்டால், அது வயிற்றை நிரப்பிவிடும். ஆனால் இந்த பாஸ்தாக்களை கர்ப்பிணிகள் சாப்பிடுவதா நல்லதா என்ற கேள்வி அனைவரது மனதிலும் நிச்சயம் இருக்கும். பாஸ்தாக்களில் நிறைய வகைகள் உள்ளன. மேலும் பாஸ்தாக்களில் காம்ப்ளக்ஸ் கார்போஹைட்ரேட், வைட்டமின் ஏ, பி மற்றும் போலிக் ஆசிட் போன்றவை நல்ல அளவில் உள்ளன.

இருப்பினும் கடைகளில் விற்கப்படும் பாஸ்தாக்கள் ஆரோக்கியமற்றது. மாறாக வீட்டில் தயாரிக்கப்படும் பாஸ்தாக்களை சாப்பிடுவது நல்லது. கர்ப்பமாக இருக்கும் போது உணவில் நல்லெண்ணெயை சேர்த்துக் கொள்வது நல்லதா? மேலும் பெண்கள் கர்ப்ப காலத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டியிருப்பதால், உண்ணும் உணவுகளில் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும். அதற்காக பாஸ்தா கெட்டதா என்று கேட்கலாம். ஆனால் அதற்கான சரியான விடை, எந்த பாஸ்தாவை சாப்பிடுகிறோம், எவ்வளவு சாப்பிடுகிறோம் மற்றும் எத்தனை முறை சாப்பிடுகிறோம் என்பதைப் பொறுத்து தான் சொல்ல முடியும்.

பாஸ்தாவில் கர்ப்பிணிகளுக்கு தேவையான நிறைய சத்துக்கள் மற்றும் வைட்டமின்கள் நிறைந்துள்ளதால், அளவாக உட்கொண்டால் எந்த ஒரு பாதிப்பும் ஏற்படாது. இருப்பினும் அதிகமாக சாப்பிட்டால், கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும். பாஸ்தாவில் ஜிங்க் மற்றும் மக்னீசியத்தை உடலானது உறிஞ்சுவதைத் தடுக்கும் பொருளான பைடேட்ஸ் உள்ளது. அதுமட்டுமின்றி, அதில் ஜங்க் உணவுகளில் உள்ள பொருட்கள் இரத்தத்தில் எளிதில் கலக்குமாறான லெக்டின்ஸ் என்னும் பொருளும் உள்ளது. அதற்காக இவை எதுவும் ஆரோக்கியமற்றதாக, அறவே தவிர்க்க வேண்டும் என்றெல்லாம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு கச்சேரி திட்டமிடல் பணிப்பாளரை மின்சாரம் தாக்கி படுகாயம்



(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்ட கச்சேரியின் திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் மின்சாரம் தாக்கி படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு. சிகிச்சை அழிக்கப்பட்டது.

இந்நிலையில் அவர் நேற்று முன்தினம் செவ்வாய் கிழமை மாலை அரசாங்க அதிபரின் ஏற்பாட்டில் அவசரமாக விமானப்படை வாணுர்தியில். அதிதீவிர சிகிச்சைக்காக கொழும்புக்கு இடமாற்றப் பட்டுள்ளார்.

இதேவேளை நேற்றயதினம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அரச உயர் அதிகாரிகள் அதிகளவில் பார்வையிட வருகைதந்திருந்தனர்.

# போரைதீவுபற்று அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் கூட்டம்



(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு-போரதீவுப்பற்று பிரதேசத்தின் அனர்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் கூட்டம் நேற்று முன் தினம் போரதீவுப்பற்று- வெல்லாவெளி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அக்ரெட் எனும் அரச சார்பற்ற அமைப்பின் அனுசரணையுடன் பிரதேச செயலாளர் என்.வில்வரெத்தினம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்ரட் நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் தாயுல் பாலாஹ், திட்ட உத்தியோகஸ்தர் இ.கஜேந்திரம், மற்றும் பிரதேச செயலய உதவித் திடமிடல் பணிப்பாளர், கிராம சேவை உத்தியோகஸ்தர்கள், பிரதேசத்தில் இயங்குகின்ற அனர்த்த முகைமைத்துவக் குழக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அக்ரெட் நிறுவனத்தினல் 45000.00 ரூபா பெறுமதியான பாதுகாப்பு அங்கிகள், லைற், கையக ஒலிபெருக்கி (மெகாபோண்), போன்ற அனர்த்த பாதுகாப்புக்குத் தேவையான உபகரணங்கள் போரதீவுப்பற்று பிரதேசத்திற்கென பிரதேச செயலாளர் என்.வில்வரெத்தினத்திடம் கையளிக்கப்பட்டன.

# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அம்மனின் மகிமை காட்சி

ஸ்ரீ மேல்மருத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி அம்மனின் ஓர் அற்புதம் நடந்தது. ஞாயிற்றுக் கிழமை ஒரு நாள் பூசாரி பூசை செய்த கொண்டி ருந்தார். அப்போது ஒரு நல்ல பாம்பு வந்தது. அந்தப் பாம்பைப் பாத்து பூசாரி பயந்தார். அந்தப் பாம்பு சிறுமியாக வடிவம் எடுத்து நீ பயப்படாதே நீ நான் சொல்வதை பக்தியோடு கேள்.



நான் சில நாட்களில் பூமியில் அவதாரம் எடுக்கப் போகின்றேன். நன்மை செய்பவர்களுக்கு நற்பலன்களையும், அதை நாசம் செய்பவருக்கு உரிய தண்டனையையும் அளிப்பேன். பாவம் நீங்கி நன்மை பெற வேண்டுமானால் யார் என் பெயரில் 101 பத்திரிகை அச்சிட்ட வெளியிடகிறார்களோ, அவர்களுக்கு 24 நாட்களில் குறைகளைத் திர்த்து வைப்பேன். ஆனால் இப்பத்திரிகையை இன்று, நாளை என்று 24 நாட்கள் வரையில் அச்சிட்டு வெளியிடாமல் இருந்தால் கஷ்டத்தைக் கொடுப்பேன் என்று அந்த நாகதேவதை விஷயத்தைச் சொல்லி விட்டு மறைந்து விட்டது.

இந்த விஷயத்தைக் கேட்ட விசாகப் பட்டிணத்தில் ஒருவர் 101 பத்திரிகை வெளியிட்ட பிறகு அவருக்கு லாட்டிரியில் 1 லட்சம் கிடைத்தது. வால்தாராவில் ஒருவர் 950 பத்திரிகை அடித்து வெளியிடலாம் என்று நினைத்த போது அவருக்கு அரசாங்க வேலை கிடைத்தது. பிறகு அவர் 1000 நொட்டீஸ் அச்சிட்டு வெளியிட்டார். இன்னொருவர் இதைப் படித்து விட்டு பொய் என்று கேலி செய்து பத்திரிகையை கிழித்து விட்டார். அதனால் அவருக்கு வியாபாரத்தில் அதிக நஷ்டம் ஏற்பட்டது.

ஆக்ரா என்னும் ஊரில் பாபுலால் என்பவர் பத்திரிகை படித்து விட்டு ஒரு மாதகால் தாமதமாகி விட்டது. வியாபாரத்தில் பெரும் நஷ்டமடைந்தார். பிறகு அவர் மனைவி மரணம் அடைந்தார். வால்தாரா என்ற ஊரில் ஐந்து பேர் கந 1800 பத்திரிகைகள் வெளியிட்டார்கள். அவர்களுக்கு 60 இலட்சம் கிடைத்தது. பிறகு அவர் அம்மன் கோவில் கட்டினார்.

இதைப் படிக்கும் அன்பர்களே நீங்களும் படித்த பின்பு இதேபோல் அவரவர் வசதிகளுக்கு ஏற்ப பத்திரிகை அச்சிட்டு வெளியிடுங்கள். அம்மன் அருளால் நினைத்த காரியம் நடக்கும் அதை பலருக்குக் கொடுங்கள் ஓம் சக்தி அம்மாவை சாதாரணமாக நினைக்காதீர்கள். நம்புங்கள் அம்மாவின் ஆசியும், அருளும், அனுக்கிரகமும் கிடைக்கும்

இது உண்மை
ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி

# தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்புள்ளதை உளவாளியான ஜாகீர் உசேன் ஒப்புக்கொண்டார்

(சென்னை)
சென்னையில் கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் உளவாளி ஜாகீர் உசேன், தீவிரவாத அமைப்புகளுடன் தமக்கு உள்ள தொடர்புகளை ஒப்புக் கொண்டுள்ளார்.

பாகிஸ்தானில் தீவிரவாத பயிற்சிப் பெற்ற அவர், சென்னை உயர் நீதிமன்றம், டிவி ஒளிபரப்பு கோபுரம், சென்ட்ரல் ரயில் நிலையம் மற்றும் அமெரிக்க துணை தூதரகம் ஆகியவற்றை தகர்க்க திட்டமிட்டிருந்ததாக சி.பி.சி.ஐ.டி காவல்துறையின் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் உள்ள ஐ.எஸ்.ஐ அமைப்பின் உத்தரவின்பேரில், இந்த இடங்களின் புகைப்படங்களை எடுத்து அனுப்பியதாகவும், அவை தெளிவாக இல்லாததால் மீண்டும் படம் பிடிக்க சென்னை வந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

இதுதவிர, பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகளை சென்னைக்கு அழைத்து வரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும், இதற்காக வாடகைக்கு வீடு தேடி வந்ததாகவும் ஜாகிர் உசேன் கூறியுள்ளார்.

தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக இதுவரை 6 முறை தமிழகம் வந்துள்ளதாகவும், இறுதியாக கடந்த 3 மாதங்களுக்கு முன்பு சென்னை வந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

ஜாகீர் உசேனை 3 நாட்கள் காவலில் எடுத்து கியூ பிரிவு காவல்துறையினர் விசாரித்து வருகின்றனர். தேசிய புலனாய்வு அமைப்பு மற்றும் கியூ பிரிவு காவல்துறையினர் அவரிடம் விடிய விடிய விசாரணை நடத்தி வருகின்றனர்.

3 நாள் காவல் முடிந்து நீதிமன்றத்தில் நாளை மீண்டும் ஜாகீர் உசேன் ஆஜர்படுத்தப்பட உள்ளார்.

# நாட்டின் பொருளாதாரம் குறித்து திருப்தியடைய முடியாது - சுஜீவ சேனசிங்க

(கொழும்பு)
நாட்டின் பொருளாதாரம் குறித்து திருப்தியடைய முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 90 வீதமானவர்கள் வறுமையில் வாடுகின்றனர். இலங்கையை அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளுடன் ஒப்பீடு செய்ய முடியாது. கட்டுநாயக்க - கொழும்பு அதிவேக நெடுஞ்சாலையில் பயணம் செய்தேன். அதிவேக நெடுஞ்சாலை உருவானமை மகிழ்ச்சியளிக்கின்றது. அதிவேக நெடுஞ்சாலை அமைப்பது தொடர்பில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும்.

அரசாங்கம் சில திட்டங்களை விலைமனுக் கோரல் அடிப்படையில் ஆரம்பிப்பில்லை.
அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் போது சர்வதேச ரீதியில் எற்றுக் கொள்ளப்பட்ட வழிமுறைகளை பின்பற்ற வேண்டுமென சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

# சிறந்த பொழுதுபோக்குகள் இளம் சமுதாயத்தை நேர்வழியில் செல்ல வைக்கும் - சிறீதரன் எம்.பி



(யாழ்ப்பாணம்)
அண்மையில் யாழ்ப்பாணம் கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழகம், மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் அமரர் ப.சச்சிதானந்தம் அவர்களின் நினைவாக இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியை நடாத்தியிருந்தது.

இதன் இறுதி ஆட்டம் யாழ்ப்பாணம் கோண்டாவில் இராமகிருஸ்ணா மகா வித்தியாலய மைதானத்தில் பா. பாலவரதன் தலைமையில் விறுவிறுப்பாக நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக பா.உறுப்பினர் சி.சிறீதரனும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா, நல்லூர் பிரதேசசபை தவிசாளர் வசந்தகுமார் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக ஓய்வுபெற்ற பிரதி கல்விப் பணிப்பாளர் வி.மாணிக்கம், நவாலி மகாவித்தியாலய பகுதித் தலைவர் விக்னேஸ்வரன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

விறுவிறுப்பாக நடந்த இந்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் குருநகர் கார்மேல் போய்ஸ் கழகமும் கொக்குவில் வராதி அம்மன் விளையாட்டுக் கழகமும் மோதின. இந்த ஆட்டத்தில் வெற்றிக் கிண்ணத்தை குருநகர் கார்மேல் போய்ஸ் கழகம் சுவீகரித்துக் கொண்டது. நடுவர்களாக நிரோஜன், இராஜேந்திரன் ஆகியோர் கடமையாற்றினர். இந்த சுற்றுப் போட்டியில் பங்குபற்றி தம் ஆற்றலை வெளிப்படுத்திய வீரர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களை வழங்கி கௌரவித்து உரையாற்றி பா.உறுப்பினர சி.சிறீதரன், நமது இளம் சமுதாயத்தின் எதிர்கால மேம்பாடு, வளர்ச்சி ஊரில் உள்ள அமைப்புக்கள் கழகங்கள், தனவந்தர்கள் செய்கின்ற இந்த வகையான ஆதரவுகள் மதித்து போற்றப்பட வேண்டியவை.

விளையாட்டோடு இங்கு சச்சிதானந்தம் என்ற ஒரு உயர் மனிதர் நினைவு கொள்ளப்படுகின்றார். நாம் கடந்த வரலாறுகளையும் வரலாற்றுக்குழைத்த மனிதர்களையும் மறந்துவிடக்கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்த களம் அமைந்திருக்கின்றது.

இன்று களியாட்டம் கொண்டாட்டம் என வேறு தீய கலாசாரங்கள் எங்கள் மண்ணில் கொட்டப்படுகின்றன. அதில் நம் இளம் சமுதாயத்தை சேர்ந்த பலரும் ஆபத்தை உணராமல் விழுந்து விடுகின்றார்கள்.

இதன் மூலம் நமது எதிர்கால ஊரும் பண்பாடும் வேறுமாதிரி இருக்க வாய்ப்புக்கள் உண்டு. எனவே இப்படியான விளையாட்டுக்கள் சார்ந்த சிறந்த பொழுது போக்குகள் நமது எதிர்காலத்தின் நேர் வழியில் செல்லும் சந்ததியை உருவாக்க வாய்ப்பளிக்கும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கைக்கு**

மாலைதீவிற்கான ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி டேவிட் டாலி இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய தினத்தை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையை நட்பு நாடாகவே பார்க்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அந்த உரிமையிலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக் குறித்து கேள்வி எழுப்பியதாகத் தெரிவித்துள்ளார்.

**எதிர்க்கட்சியின்**

மைக்கல் பெரேரா உரையாற்றிக் கொண்டிருந்தார்மேற்படி. சட்ட மூலத்தைச் சமர்ப்பித்துப் பேசிய அமைச்சர், அந்தச் சட்ட மூலம் குறித்தோ அதன் மூலம் விதிக்கப்படும் வரி குறித்தோ சபையில் ஒரு வசனம் கூடப் பேசவில்லை என்று அவர் விமர்சித்தார்.

இதனால் சீற்றமடைந்த கிராமிய விவகார அமைச்சர் அதாவுட செனிவிரத்ன, தமது கையிலிருந்த காகிதங்களை பந்தாகச் சுருட்டி எதிர்க்கட்சிப் பேச்சாளர் மீது வீசி எறிந்தார். ஆனால் அது எதிரணியைச் சென்றடைய முன்னரே அரசுத் தரப்பின் பிரதம கொறடாவான அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவின் மேசையில் விழுந்துள்ளது.

அடுத்துப் பேசிய ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜயவிக்ரம பெரேரா, அமைச்சர் அதாவுட செனிவிரத்னவின் இத்தகைய செயலை ஏற்றுக்கொள்ள முடியாதது என விமர்சித்தார்.

இத்தகைய முதிர்ச்சியற்ற - சிறுபிள்ளைத்தனமான - செயல்களில் ஈடுபடும்

**அரசாங்க வேலையென**

வெளிநாடுகளுக்கான இலங்கைத் தூதுவர்கள் 12 பேர் யாழ்ப்பாணத்திற்கு நேற்று (07.05.2014) காலை வருகைதந்தனர்.

இவர்களுடனான சந்திப்பினையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த அரச அதிபரிடம் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்க வேலைவாய்ப்பை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் மாவட்ட செயலகங்களோ, அல்லது மாகாணசபைகள் ஊடாகவே வழங்கப்படமுடியும் ஆனால் அநாமதேய துண்டுப்பிரசுரம் வெளியிட்டோ, ஒலிபெருக்கிகளில் அறிவித்தோ அரசாங்க வேலைவாய்ப்பு வழங்க முடியாது.

ஆனால் யாழ்.மாவட்டத்தில் அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக கூறப்படுகின்றது ஆனால் இதுவரை யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை அதேவேளை இந்த விடயம் குறித்து எவரும் எம்மை அணுகவுமில்லை.

வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி ஏமாற்றப்பட்டது தொடர்பாக முறைப்பாடுகள் எதுவும் கிடைக்காத நிலையில் அது தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கையினையும் நாம் எடுக்க முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**சர்வதேச**

ஒன்றும் நடைபெற்றுள்ளது. இதற்கிடையே இலங்கைக்கு எதிரான இந்த சர்வதேச விசாரணைக்குத் தேவையான பணத்தில் ஒருபகுதியை கனடா, பிரித்தானிய மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன.

மேலும் தேவைப்படும் எஞ்சிய பணத்தைத் திரட்டித் தரவும் அந்நாடுகள் முன்வந்துள்ளன.

இதனையடுத்து இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணைக் குழுவொன்றை அமைப்பது மற்றும் அதன் பொறுப்புகள் தொடர்பில் இம்மாத இறுதிக்குள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமைப்பு அறிவித்தல் ஒன்றை விடுக்கவுள்ளது.

இலங்கை போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடாத்த நோர்வே நிதி உதவிகளை வழங்கியுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவனீதம்பிள்ளைக்கு இவ்வாறு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைப் போர்க் குற்றச் செயல்கள் மற்றும் ஏனைய உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை விசாரணை நடாத்த உள்ளது.

இந்த விசாரணைகளுக்காக சுமார் 5000 மில்லியன் ரூபாவினை நோர்வே அரசாங்கம், நவனீதம் பிள்ளைக்கு வழங்கியுள்ளது.

நிதி வழங்குவது குறித்து நவனீதம் பிள்ளையுடன் ஏற்கனவே ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டுள்ளது. இலங்கைக்கு எதிராக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் தீர்மானத்திற்கு நோர்வே ஆதரவளித் திருந்தமைகுறிப்பிடத்தக்கது. தீர்மானத்திற்கு ஆதரவான நாடுகள் மட்டுமே விசாரணைக்காக பணம் வழங்கியுள்ளதாக ஜெனீவாவிற்கான பாகிஸ்தான் பிரதிநிதி குற்றம் சுமத்தியுள்ளார்.

**இறுதி யுத்தத்தில்**

இதில் இலங்கை சார்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கான பிரதி நிரந்தர பிரதி சவேந்திரசில்வா கலந்துக் கொள்கிறார்.

மேலும் நியுசிலாந்து கனடா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் கலந்துக் கொள்ளவுள்ளனர்.

**மைத்திரிபால**

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் ராஜித சேனாரத்தின மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் ராஜித சேனாரத்ன,

2004ம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிவுகளின் பின் அனுர பண்டாரநாயக்க, லகஸ்மன் கதிர்காமர், ரத்னசிறி விக்கிரமநாயக்க ஆகியோரின் பெயர்களோடு மைத்திரிபாலவின் பெயரும் பிரதமர் பதவிக்கு பரிசீலிக்கப்பட்டது.

அப்போது கட்சியில் பெரும்பாலானவர்களின் ஆதரவு மைத்திரிபால சிறிசேனவுக்கே இருந்தது. அதன் காரணமாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பொலன்னறுவைக்கு ஹெலிகொப்டர் ஒன்றை அனுப்பினார்.

உடனடியாக கொழும்பு வந்து பிரதமர் பதவியைப் பொறுப்பெடுக்க தயாராகுமாறும் மைத்திரிபாலவுக்கு தகவல் அனுப்பினார். ஆனால் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதனை மறுத்துவிட்டார்.

மேலும் அந்தப் பதவிக்கு பொருத்தமானவர் மஹிந்த ராஜபக்சதான், அவரையே நியமிக்க ஏற்பாடு செய்யுங்கள் என்றும் பெருந்தன்மையாக கூறிவிட்டார்.

அத்துடன் ஆளுனர் அலவி மௌலானா தனிப்பட்ட முறையில் சந்திரிக்காவுக்கு அளித்த நெருக்குதல் என்பன எல்லாம் சேர்ந்து தான் மஹிந்த ராஜபக்சவை பிரதமராக்கியது.

அந்த வகையில் தன்னைத் தேடி வந்த பதவி, அதிகாரத்தை அடுத்தவருக்கு விட்டுக் கொடுத்த பரந்த மனப்பான்மை கொண்டவர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன.

அவரது தியாக குணம் இன்றைய அரசியல்வாதிகள் யாரிடமும் இல்லை என்றும் அமைச்சர் ராஜித சேனாரத்ன பாராட்டியுள்ளார்.

**குழுவாகச் சேர்ந்து**

இந்தச் சந்திப்பின் போது மாணவர் ஒன்றியத் தலைவர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் இது குறித்து மேலும் தெரிவித்தவை வருமாறு:

பயங்கரவாதத்துக்குத் துணைபோகும் வகையில் அரசியல் பின்புலங்களுடன் மாணவர்கள் செயற்படுகின்றனர். அதனால் அமைதி நிலை பாதிக்கப்படுகிறது. இத்தகைய செயற்பாடுகளை பல்கலைக்கழக மாணவர்கள் கைவிடவேண்டும்.

நீங்கள் பல்கலைக்கழகத்துக்குள் மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதாகக் கூறி பிரபாகரனுக்கு அஞ்சலி செலுத்துவீர்கள். எனவே, இதனை அனுமதிக்க முடியாது - என்றார்.

விடுதிகளுக்குள் இராணுவத்தினரும் புலனாய்வாளர்களும் அனுமதியின்றிப் புகுவது தொடர்பிலும் விடுதிகளில் தங்கியுள்ள சிங்கள மாணவர்களுக்கு இராணுவத்தினர் அனுமதியின்றி உணவு வழங்குவது குறித்தும் மாணவர்களால் இராணுவத் தளபதிக்கு எடுத்துக் கூறப்பட்டதுடன் இத்தகைய செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இந்த விடயங்கள் குறித்துத் தாம் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக இராணுவத் தளபதி உறுதியளித்தார்.

இதேவேளை, பீடாதிபதிகள் சிலரும் இராணுவத் தளபதியிடம் தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

நவம்பர் மாதம் இவ்வாறான நெருக்கடிகள் வருவது வழமை. ஆனால் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தைக் கடைப்பிடிப்பதற்கு தடை விதிப்பது வருத்தமளிக்கிறது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

மாணவர்கள் அரசியல் பின்புலத்துடன் செயற்படுகின்றனர் என இராணுவத் தளபதி குற்றம்சாட்டிய போது அதனை மாணவப் பிரதிநிதிகள் மறுத்தனர்.

எனினும், "அப்படி சொல்லமுடியாது. சிலர் அரசியல் பின்புலத்துடனேயே செயற்படுகின்றனர்" என பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவித்தார் எனக் கூட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள் குறிப்பிட்டனர்.

**ஐ.நா பொதுச் சபைத**

இருவருக்கும் இடையில் பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இளைஞர்களின் எதிர்காலம், பல்வேறு துறைகளில் பெண்களின் வகிபங்கு, சுகாதாரம், சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பம், விளையாட்டுத்துறை உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியை பார்க்க முடிவதாக ஆசே தெரிவித்துள்ளார்.

உலக இளைஞர் மாநாட்டு ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ ஆற்றிய உரை வரவேற்கப்பட வேண்டியது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA



## பெங்களூரை வீழ்த்தியது மும்பை



மும்பை இந்தியன்ஸ்- ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகளுக்கு இடையேயான ஐ.பி.எல். 27-வது போட்டி மும்பையில் நடைபெற்றது. டாஸ் வென்ற பெங்களூர் அணி கேப்டன் வீராட் கோலி பீல்டிங் தேர்வு செய்தார்.

மும்பையைச் சேர்ந்த பென் டங்க்- சி.எம். கௌதம் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். டங்க் 15 ரன்னிலும், கௌதம் 30 ரன்னிலும் அவுட் ஆனார்கள்.

அதன்பின் வந்த ரோகித் சர்மா 35 பந்தில் 59 ரன் எடுத்து கடைசி வரை அவுட் ஆகாமல் இருந்தார். இவரது ஆட்டத்தால் மும்பை அணி 20 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 187 ரன் குவித்தது.


பின்னர் 188 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பெங்களூர் அணியைச் சேர்ந்த படேல்- கெய்ல் களம் இறங்கினர். இருவரும் முதல் விக்கெட்டுக்கு 5.1 ஓவரில் 53 ரன்கள் எடுத்தனர். படேல் 19 பந்தில் 26 ரன் எடுத்தார்.
அடுத்து வீராட் கோலி வந்தார். கெய்ல் 38 ரன்னில் ஹர்பஜன் சிங் பந்தில் ஆட்டம் இழந்தார். அடுத்த வந்த டி வில்லியர்ஸ் 9 ரன்னில் அவுட் ஆனார்.

வீராட் கோலியும் 35 ரன்னில் ஆட்டம் இழக்க அதன்பின் வந்த வீரர்கள் சரியாக விளையாடாததால் பெங்களூர் அணி 20 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 168 ரன்கள் எடுத்தது. இதனால் மும்பை அணி 19 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது

## ஆசிய விளையாட்டை நடத்த இந்தியா விருப்பம்

இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் பொதுச் செயலாளர் ராஜீவ் மேத்தா நேற்று அளித்த பேட்டியில், 2019-ம் ஆண்டு ஆசிய விளையாட்டை நடத்துவதற்கான உரிமம் கேட்கும் போட்டியில் இருந்து வியட்னாம் விலகி உள்ளது. இதையடுத்து இந்த போட்டியை இந்தியாவில் நடத்த விரும்புகிறோம்.
அடுத்த மாதம் நடைபெறும் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் பொதுக்குழு கூட்டத்தில் இது குறித்து இறுதி முடிவு எடுப்போம். இப்போது மத்தியில் புதிய அரசு அமைவதை எதிர்நோக்கி காத்திருக்கிறோம். இந்த முடிவுக்கு அரசின் ஒப்புதல் கிடைக்கும் என்று நம்புகிறேன்.
போட்டியை நடத்துவதற்குரிய எல்லா உட்கட்டமைப்பு வசதிகளும் டெல்லியில் உள்ளன. எனவே மத்திய அரசின் அனுமதி கிடைத்தால் போதும் என்றார்.

## மாட்ரிட் டென்னிசில் பெடரர் விலகல்



மாட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நேற்று தொடங்கியது. இந்தபோட்டியில் பங்கேற்பதாக இருந்த சுவிட்சர்லாந்தின் நட்சத்திர வீரர் ரோஜர் பெடரர் கடைசி நேரத்தில் விலகி விட்டார். அவரது மனைவி மிர்கா நிறைமாத கர்ப்பிணியாக இருக்கிறார்.

இன்னும் சில தினங்களில் அவருக்கு 3-வது குழந்தை பிறக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால் அருகில் இருந்து கவனித்துக் கொள்ள வசதியாக மாட்ரிட் போட்டியில் இருந்து பின்வாங்கி இருக்கிறார்.
இதனால் ரசிகர்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்வதாகவும், அடுத்த ஆண்டு அங்கு சென்று மீண்டும் விளையாட முடியும் என்று நம்புவதாகவும் பெடரர், பேஸ்புக் வலைதளத்தில் எழுதியுள்ளார். பெடரர்-மிர்கா தம்பதிக்கு ஏற்கனவே 4 வயதில் இரட்டை பெண் குழந்தைகள் இருக்கிறார்கள்.










இப்பத்திரிகை #87 பிரதான வீதி, மன்னாரில் அமைந்துள்ள நித்திலம் வெளியீட்டகத்தில் 08.05.2014 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org